
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest


ஜூலை 2013 July | இதழ் 270 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION




23 வது ஆண்டில் 3rd Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து — From the Editor

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

# காவியுடைப் பயங்கரவாதம்

'இலங்கையும் இனப்பிரச்சனையும் போல' என்ற நவீன சொற்றொடர் கடந்த நாற்பது வருடத்துள் உருவான ஒன்று.


தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து நடத்தி வரும் இனரீதியான தாக்குதலால், இன்றும் அவர்கள் அகதிகளாகப் படகுப் பயணங்களை மேற்கொண்டு தங்கள் உயிர்களை மாய்த்து வருகிறார்கள்.

இனவாதம் மட்டுமே வெறிபிடித்தாடிய இலங்கையில், தற்போது மதவாதம் மதம்பிடித்துத் தலைவிரித்தாடுகின்றது.

யார் இந்த மதவாதிகள்? எதற்காக இந்தத் தாக்குதல்கள்? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

சர்வதேச ரீதியில் அதிகளவு வாசகர்களைக் கொண்ட 'ரைம்' சஞ்சிகையின் இந்த மாத (2013 ஜுலை) இதழ், இந்தக் கேள்விகளுக்கு விடை பகர்கின்றது.

'பௌத்த பயங்கரவாதத்தின் முகம் - ஆசியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயலுக்கு தீவிரவாத பிக்குகள் எவ்வாறு நெருப்பு மூட்டுகிறார்கள்' என்ற தலைப்புடன் இந்த இதழ் அமைந்துள்ளது.




பர்மாவில் இயங்கும் '969 பௌத்த தேசிய முன்னணி' என்னும் தீவிரிவாத அமைப்பின் தலைவரெனக் கூறப்படும் விராது தேரரின் ஒளிப்படத்துடன் வெளிவந்துள்ள 'ரைம்' ஜுலை இதழ், ஆசியப் பிராந்தியத்தில் கம்போடியா, தாய்லாந்து மியன்மார் (பர்மா), இலங்கை என்று பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடுகளில், சிறுபான்மை இனமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையை அழகாகச் சித்தரிக்கின்றது.

இலங்கையில், பௌத்த பேரினவாதம் அரசாங்க நிதியுதவியுடனும் ஆசீர்வாதத்துடனும் இயங்குவது பகிரங்க ரகசியம். பொதுவாக முஸ்லிம்களையே இவர்கள் இலக்கு வைத்தாலும், கிறிஸ்தவ-கத்தோலிக்கர் மற்றும் இந்துக்கள் என்று அனைவரையும் அழிக்க முனைந்துள்ளனர்.

சுமார் நானூறுக்குமதிகமான இந்து வழிபாட்டுத்தலங்களை இவர்கள் குறுகிய காலத்தில் நிர்மூலமாக்கியதும், அவ்விடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவி வருவதும் நிகழ்காலச் சான்று.

புதிதாக முளைவிட்டுள்ள 'பொதுபலசேனா' அமைப்பு, '969 பௌத்த முன்னணி'யின் கிளையாகவே அமைந்திருப்பதும், இதன் 'ஞானத் தந்தை'யாக ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோதபாய ராஜபக்ஷ இயங்குவதும் பேராபத்தானது.

'இலங்கை ஒரு பௌத்த நாடு. இங்கு மற்றவர்களுக்கு இடமில்லை' என்று பொதுபலசேனா அறிவித்துவிட்டது,

'காவியுடைப் பயங்கரவாத'த்தின் கொள்கைப் பிரகடனமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

இதனை முளையிலேயே கிள்ளத் தவறினால்.......

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களுக்கும் உள்ளூராட்சி தேர்தலில் வாக்குரிமை வாய்ப்பு?

கனடியப்பிரஜாவுரிமை பெறாமல், கனடிய நிரந்தர வதிவிட (Permanent Resident) உரிமையுடன் வாழ்பவர்களுக்கும் ரொறன்ரோ நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் ரொறன்ரோ நகர சபையில் கடந்த மாதம் 12ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

ஒன்ராறியோ மாகாண அரசு சட்ட ரீதியாக அனுமதி வழங்கினால் மட்டுமே இது நடைமுறைக்கு வரும். ரொறன்ரோவின் இந்தத் தீர்மானத்தைத் தாம் ஆதரிப்பதாக ஒன்ராறியோ முதலமைச்சர் கத்லீன் வின் பொது நிகழ்வொன்றில் உரையாற்றும் வேளையில் தெவித்தார்.

நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களுக்கும் வாக்குரிமை வழங்குவதோடு, நகரசபைத் தேர்தலில் விருப்பமான ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பது அல்லது முதலாம் இரண்டாம் மூன்றாம் தெரிவு என்ற முன்னுரிமை அடிப்படையில் வாக்களிக்க அனுமதிப்பது என்றவாறு திருத்தம் கொண்டுவர வேண்டுமென ஒன்ராறியோ அரசாங்கத்திடம் கேட்பதென ரொறன்ரோ நகரசபையின் தீர்மானம் தெரிவிக்கின்றது.

ஒன்ராறியோ மாகாண அரசு இதனைச் சாதகமாகப் பரிசீலித்து சட்டமாக மாற்றினாலும், 2018ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே இதனை அமுலுக்குக் கொண்டுவர முடியுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த திட்டம் நடைமுறைக்கு வருமானால் ரொறன்ரோ நகர சபை எல்லைக்குள் வசிக்கும் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற சுமார் 250,000 பேர் வாக்களிக்கும் உரிமை பெறுவர். இவர்கள் சகல வரிகளையும் செலுத்தி வருவதோடு, தேர்தல் பணிகளிலும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக செயற்படுவதால், வாக்குரிமை வழங்கவேண்டுமென்று பலரும் ஆதரவுக் குரல் கொடுத்துள்ளனர்

உலகின் 26 நாடுகளில், பிரஜாவுரிமை பெறாது நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களுக்கும் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.
நியுஸிலாந்தில், சகல தேர்தல்களிலும் வாக்களிக்கும் உரிமை இவர்களுக்குண்டு.

## கனடிய பிரஜாவுரிமைப் பரீட்சை: சித்தி பெறாதவர்களுக்கு இலவச இரண்டாம் எழுத்துப் பரீட்சை

### New rules will allow free do-over for applicants who fail Canadian Citizenship Test

கனடிய பிரஜாவுரிமைச் சட்டத்தில் சில முக்கிய மாற்றங்கள் விரைவில் வரவுள்ளதாக குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

இதில் முக்கியமான ஒன்றாக, ஒரு தடவை பிரஜாவுரிமைப் பரீட்சையில் தவறிய ஒருவர் மீண்டுமொரு முறை இலவசமாக - புதிதாகக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்காமல், பிரஜாவுரிமைப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்.

முதல் பரீட்சையில் சித்திபெறத் தவறிய நாளைத் தொடர்ந்து வருகின்ற அடுத்த நான்கு முதல் எட்டு வாரங்களுக்குள் இரண்டாவது தடவையாக (இலவசமாக) மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இலவசமாகக் கிடைக்கும் இரண்டாம் தடவைப் பரீட்சையிலும் அவர் சித்தியடையத் தவறினால், பிரஜாவுரிமை நீதிபதி ஒருவர் முன்னிலையில் அவர் ஆஜராக்கப்பட்டு அவருக்கிருக்கும் கனடிய அரசகரும மொழிகளிலுள்ள பரிச்சயம், கனடா சம்பந்தமான அறிவு போன்றவை நேர்முகமாகப் பரீட்சிக்கப்படும். இதில் சித்தியடைவாரானால் கனடியப் பிரஜாவுரிமை கிடைக்கும்.

ஏற்கனவே கனடியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்து பரீட்சையை எதிர்பார்த்திருப்பவர்கள் அனைவரும், புதிய நடைமுறைக்குள் கொண்டு வரப்படுவர்.

ஒரே விண்ணப்பத்தில் கிடைக்கும் மூன்று வாய்ப்புகளிலும் ஒருவர் சித்தியடையத் தவறினால், மீண்டும் கட்டணம் செலுத்திப் புதிதாக விண்ணப்பம் செய்ய வேண்டும்.

Those who fail the citizenship test will soon get a one-time do-over according to new rules being introduced by the federal government. Immigration Minister Jason Kenney wants to throw prospective Canadians a bone by giving them two chances to pass the test.

Now, those who fail must appear before a judge, which can result it even longer delays. Under the new rules, applicants who fail will be told so immediately and be given the opportunity to schedule a rewrite within four to eight weeks. Those who fail the test second time, however, will have to get in the queue to be assessed by a citizenship judge. The new rules will be retroctive which means those already in the queue for a meeting will also be invited to take the test again.

புதிய திட்டத்தின் கீழான இன்னொரு முக்கிய மாற்றம், குடும்பமாகப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பவர்களில் ஒருவர் சித்தியடையத் தவறும் கட்டத்தில், குடும்பத்தின் எஞ்சியவர்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும். முன்னைய நடைமுறையின்படி, குடும்பத்தில் ஒருவர் தகுதியடையாதவிடத்து மற்றையவர்களது பிரஜாவுரிமையும் தாமதமாகும். அந்த ஒருவருக்காக மற்றையவர்களும் காத்திருக்க வேண்டும். இந்த நடைமுறை முற்றாக நீக்கப்படுகின்றது.

இதனால் குடும்பமாக வரும் புதிய குடிவரவாளர்கள், நீண்ட காலத்துக்குப் பிரஜாவுரிமை பெறக் காத்திருக்க வேண்டிய தேவை இருக்காது.

The new plan will now approve family members on their own merit. Before, when one relative failed a knowledge or language test, all those listed on the same application were barred from moving to the next step until everyone could do so at the same time.

தற்போது வருடமொன்றுக்கு சுமார் இரண்டு லட்சம் புதியவர்கள் கனடிய பிரஜாவுரிமையைப் பெறுகின்றனர். 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரஜாவுரிமை பெறுவோர் தொகை சுமார் முப்பது வீதத்தினால் அதிகரித்துள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

றொறன்றோ பெரும்பாக வாகன சொந்தக்காரர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி: இந்தக் கோடை காலத்தில் எரிபொருளின் விலை குறைவாகவிருக்குமென எதிர்வு கூறப்படுகின்றது. ஒரு லீட்டர் சாதாரண எரிபொருள் ஒரு டாலர் பதினெட்டுச் சதத்திலிருந்து ஒரு டாலர் 21 சதத்துக்கு உட்பட்டதாக (1.18 - 1.21) இருக்குமென்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன. சிலவேளை, இதனிலும் பார்க்க மேலும் விலை குறையலாமென்றும், தேவையான எரிபொருள் கையிருப்பிலிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கனடிய பிரஜாவுரிமைப் பரீட்சைக்கான கைநூல் Discover Canada, தற்போது eBook வடிவில் கனடிய குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. இதனைத் தரவிறக்கம் செய்ய விரும்புபவர்கள், பின்வரும் இணையத் தளத்துக்கு http://www.cic.gc.ca./english/resources/publications/discover/download.asp செல்லலாம். 2009ல் அச்சு வடிவில் புத்தகமாக வெளியான இந்தப் பரீட்சை நூலின் நாற்பதாயிரம் பிரதிகள் இதுவரை விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள் தமது சேவை வழங்குனர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தை இரண்டு வருடங்களில் முறித்துக் கொள்ளும் உரிமையை CRTC எனப்படும் இதற்கான உரிமை வழங்கும் ஆணையம் இப்போது வழங்கியுள்ளது. செல்லிடத் தொலைபேசிகளை முழுமையாகப் பணம் செலுத்தி வாங்குபவர்கள், இனிமேல் அதனை உடனடியாக அன்லொக் (unlock) செய்யமுடியும். புதிய நடைமுறைகளினால் இதற்கான கட்டணங்களை சேவை வழங்குனர்கள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

கனடாவின் மூத்த குடிகள் என்று அழைக்கப்படும் பூர்வகுடிகளின் சிறுவர்களில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானவர்கள் வறுமையில் வருந்துவதாக கனடாவின் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இதனையிட்டு கனடாவின் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். கனடிய ஆட்சியாளர்களும் அவர்களின் கொள்கை வகுப்பாளர்களும் திட்டமிட்டே பூர்வ குடிகளை ஒதுக்கி வருகின்றார்களோ என்ற சந்தேகமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

றொறன்றோ நகரிலுள்ள முக்கிய வீதிகளில் டஃபரின் வீதியே (Dufferin St.) தொடர்ந்து போக்குவரத்துக்கு மிகவும் மோசமானதாகவிருப்பதாக கனடிய போக்குவரத்து நிலையம் (CAA) அறிவித்துள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தின் மோசமான விதிகளில் றொறன்றோவிலுள்ள மூன்று வீதிகள் உள்ளடங்குகின்றன. பிஞ்ச் அவினியு மேற்கு (Finch Ave. West) மற்றும் லோறன்ஸ் அவினியு கிழக்கு (Lawrence Ave. East) ஆகியவை இவற்றுள் முறையே மூன்றாவது ஆறாவது இடங்களை வகிக்கின்றன.

கனடிய மத்திய அரசாங்க ஊழியர்களின் சுகவீன விடுமுறை நாட்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பலர் இதனைத் தவறாகப் பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நடைமுறையின் கீழ், பயன்படுத்தாத விடுமுறை நாட்களை ஒன்றாகச் சேர்த்துப் பயன்படுத்தும் வாய்ப்புண்டு. கனடிய மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு வருடமொன்றுக்கு 18 நாட்கள் சுகவீன விடுமுறை வழங்கப்படுகின்றது. ஆனால் தனியார் துறையினருக்கு ஐதில் ஐம்பது வீதமே வழங்கப்படுகிறது.

றொறன்றோ பெரும்பாகத்துக்கு இரண்டாவது பாரிய விமான நிலையமொன்று தேவையென்ற சிபார்சின் அடிப்படையில் அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்குள் பிக்கரிங்கில் புதிய விமான நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டுரம் பிரதேசத்தில் பிக்கரிங் அமைந்துள்ளது. இதற்கென 75 சதுர கிலோ மீட்டர் காணியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக நிதியமைச்சர் ஜிம் பிளர்கெட்டி அறிவித்துள்ளார். இதில் இருபது சதுர கிலோ மீட்டர் றூஜ் தேசிய பூங்காவுக்குப் பயன்படுத்தப்படும்.

## நிருத்த நிறைஞர் பட்டதாரிகள் சங்கத்தின் 'கனவுகள்' நடனவிழா

பிரபல நடன ஆசிரியர் நிறைஞ்சனா சந்துருவின் கனடா கலைமன்றத்தில் ஆசிரியதரச் சித்தியின் பின்னர் 'நிருத்த நிறைஞர்' பட்டம் பெற்ற மாணவிகள் நடத்தும் நடனக் கல்லூரிகளின் ஒன்றிணைந்த நிகழ்ச்சியான 'கனவுகள்' விழா இந்த மாதம் 7ஆம் திகதி பிற்பகல் நோர்த் யோர்க் நூலக அரங்கத்தில் நடைபெறவுள்ளது. சுமார் நாற்பது வரையான மாணவர்கள் இங்கு நிகழ்ச்சிகள் வழங்கவுள்ளனர். ஐந்தாவது ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்ச்சியின் மூலம் சேகரிக்கும் நிதியில் ஒரு பகுதி, கடந்த ஆண்டைப்போல இந்த வருடமும் றொறன்றோ சிறுவர் வைத்தியசாலைக்கு (Hospital for Sick Children) வழங்கப்படவுள்ளது.

## குட்டி யாழ்ப்பாண வருடாந்த விழா

குட்டி யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டு வந்த பார்ளிமென்ட்/வெலஸ்லி பகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தின் வருடாந்த 'கபேஜ்ரவுண் விழா' (Cabbagetown Festival) செப்டம்பர் மாதம் 7,8 சனி ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. இங்கு வாழும் தமிழர் உட்பட பல்வேறு இன மக்களின் கலை-பண்பாடுகளை விளக்கும் நிகழ்ச்சிகளும் பல்வேறு உணவு வகைகளும் விசேட சந்தைகளும் இங்கு அமைக்கப்படும்.

## நகர முதல்வருக்கு பழச்சாறு 'அபிஷேகம்'

றொறன்றோ நகர முதல்வர் றொப் போர்ட் கடந்த மாத நடுப்பகுதியில் 'லிற்றில் இத்தாலி' என அழைக்கப்படும் கொலிஜ் வீதி-பாதர்ஸ்ட் வீதிப் பகுதியில் இடம்பெற்ற விழாவுக்குச் சென்றபோது, அங்கு நின்ற இளம்பெண் ஒருவர் தோடம்பழச் சாற்றினால் அவருக்கு 'அபிஷேகம்' செய்தார். 27 வயதான ஷனோன் என்ற அப்பெண்ணைக் கைதுசெய்த பொலிஸார் அவர்மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து நகர முதல்வரின் எதிர்கால பாதுகாப்புத் தொடர்பாக ஆராயப்பட்டது. ஆனாலும் புதிய பாதுகாப்பு எதனையும் ஏற்க முதல்வர் றொப் போர்ட் மறுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயின்ஸ்பார்க்
## லிபரல் கட்சிப் பிரதிநிதிகள் மூவர் கடந்த மாதம் பதவி துறந்தனர்!



ஒன்ராறியோ மாகாண சபையில் 23 வருடங்கள் பிரதிநிதியாகவும், மாகாண முதலமைச்சராகப் பத்து வருடங்களும் பணியாற்றிய டால்ரன் மக்கன்ரி கடந்த மாதம் அரசியலிலிருந்து விலகினார். அவரது ஆட்சிக்குப் பிரச்சனையாக அமைந்த அனல்மின்ஆலைகள் ரத்து விடயத்தில் சிக்குப்பட்டிருந்த இவருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இவரது பதவி துறப்பு பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது. 23 வருட மாகாணசபை உறுப்பினர் பதவி வகித்தமைக்காக சேவைக்கால கொடுப்பனவாக இவருக்கு 313,000 வரையான டாலர்கள் வழங்கப்படவுள்ளது.



டால்ரன் மக்கன்ரியின் ஆட்சியில் பிரச்சனைக்குரியதாகவிருந்த கல்வி அமைச்சர் பதவி உட்படப் பல அமைச்சுப் பதவிகளை வகித்த எற்றோபிக்கோ-லேக்ஷோர் தொகுதியின் மாகாண சபை உறுப்பினரான லோரல் புரோட்டனும் அரசியலுக்கு விடைகொடுத்துள்ளார். இந்த மாதம் 2ஆம் திகதியில் நடைமுறைக்கு வரக்கூடியதாக தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். கத்லின் வின் அமைச்சரவையில் இவர் அரசாங்க நிர்வாக அமைச்சராகவிருந்தார்.



கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக விடுமுறையில் நின்ற ஸ்காபரோ-கில்ட்வூட் தொகுதியின் மாகாணசபை உறுப்பினரான மார்கிரட் பெஸ்ட், கடந்த மாத இறுதியில் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். டால்ரன் மக்ன்ரி அரசில் பல அமைச்சுப் பதவிகளிலிருந்த ஒரேயொரு கறுப்பினத்தவரான இவர், கத்லீன் அரசில் அமைச்சராக நியமிக்கப்படாத ஒரேயொரு முன்னைய அமைச்சராவார். ஏதோவொரு காரணத்துக்காக கத்லினினால் மார்கிரட் பழிவாங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.●

## ஒட்டாவா
## நாடாளுமன்ற அரசியலிலிருந்து பொப் ரே ஓய்வு



ரொறன்ரோ மத்தி-றோஸ்டேல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான பொப் ரே முழுநேர நாடாளுமன்ற அரசியலிலிருந்து கடந்த மாதம் நிரந்தர ஓய்வு பெற்றார். ஆரம்பத்தில் என்.டி.பி கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த இவர், பின்னர் ஒன்ராறியோ என் டி. பியின் தலைவராகி, 1990-1995 காலப்பகுதியில் ஒன்ராறியோ முதலமைச்சராகவிருந்தவர். 1995 மாகாணத் தேர்தலில் என். டி. பி அடைந்த படுதோல்விக்குக் காரணமாகவிருந்தாரென்ற குற்றச்சாட்டை அடுத்து அக்கட்சியிலிருந்து வெளியேறிய பொப் ரே, பின்னர் மத்திய லிபரல் கட்சியில் சேர்ந்தார். ரொறன்ரோ மத்தி-றோஸ்டேல் எம்.பியாகப் பின்னர் தெரிவான பொப் ரே, மிகவும் நெருக்கடியான காலத்தில் லிபரலின் இடைக்காலத் தலைவராகி, ஜஸ்ரின் ரூடோ அதன் தலைவராகும்வரை கட்சிக்காகக் கடுமையாக உழைத்தவர்.●

## மொன்றியல்
## ஊழல் குற்றச்சாட்டுகளால் மேயர் பதவி பறிபோனது



ஊழல் உட்பட பதினான்கு வரையான குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொலிசாரால் கைதான மொன்றியல் மேயர் மைக்கேல் அப்பிள்போமின் பதவி பறிபோனது. இவருக்கு முன்னர் மேயராகவிருந்த ஜெரால்ட் ட்றம்ளெயின் பதவியும் ஊழல் குற்றச்சாட்டினால் பறிபோனது. தற்போது இடைக்கால பதில் மேயராக லோரன்ற் பிளசன்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.●

## ஒன்ராறியோ
## ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்

ஏற்கனவே சிறுபான்மை அரசாங்கமாகப் பதவியேற்ற கத்லின் வின் தலைமையிலான ஒன்ராறியோ மாகாண அரசாங்கம், தனது லிபரல் கட்சியின் ஐந்து பிரதிநிதிகளின் பதவி விலகலால் மேலும் பின்தள்ளப்பட்டு, அன்ட்றியா ஹொவார்ட்டின் ஆதரவில் தங்கியுள்ளது. முன்னாள் நிதியமைச்சர் டுவைற் டங்கன், முன்னாள் எரிசக்தி அமைச்சர் கிறிஸ் பென்லி, முன்னாள் முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி, முன்னாள் கல்வி அமைச்சர் லோரல் புரோட்டன், முன்னாள் நுகர்வோர் சேவைகள் அமைச்சர் மார்கிரட் பெஸ்ற் ஆகியோரே பதவி துறந்தவர்கள். இவர்களின் வின்ட்சர்-ரெகுமெஷ், லண்டன் மேற்கு, ஒட்டாவா தெற்கு, எற்றோபிக்கோ-லேக்ஷோர், ஸ்காபரோ --கில்ட்வூட் ஆகிய தெகுதிகளுக்கு இரண்டு வெவ்வேறு திகதிகளில் இடைத்தேர்தல் நடத்த ஏற்பாடாகி விருகிறது. இரண்டு எதிர்க்கட்சிகளினதும் பலமான எதிர்ப்பை கத்லின் தலைமையில் லிபரல் எதிர்கொள்ளவுள்ளது.●

## ரொறன்ரோ
## நித்திய கண்டம் பூரண ஆயுசு?



ரொறன்ரோ மேயராகப் பதவியேற்ற நாளிலிருந்து றொப் போர்ட் தினசரி ஆபத்தான 'கண்டங்'களைத் தாண்டி வருகின்றார். இதுவே அவரை மேலும் பலமடையச் செய்து வருவதாக அவரது நண்பர்கள் கூறுகின்றனர். ரொறன்ரோவின் ஆங்கிலத் தினசரியொன்று இவரோடு பகைமை கொண்டுள்ளதால், இவருக்கு எதிரான செய்திகளைத் தேடியெடுத்து தினமும் பிரசுரித்து வருகின்றது. 'விருப்பம் கலந்த முரண்பாடு' தொடர்பாகத் தனியார் ஒருவர் தாக்கல் செய்த மனுவில் சில மாதங்களுக்கு முன்னர் றொப் போரட் நிரபராதியெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதனை எதிர்த்து மனுதார்கள் தாக்கல் செய்த மேன்முறையீட்டை உயர்நீதி மன்றம் கடந்த மாதம் 20ஆம் திகதி தள்ளுபடி செய்தது போர்ட்டுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். போதைப்பொருள் பாவனை விசாரணைக்கு அடுத்ததாக என்ன கண்டத்தை இவர் சந்திப்பாரோ?●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# வயதாகும் வேளையில் மூளை மங்குவதைத் தடுத்தல்

உடற் பயிற்சி உடல் நலத்திற்கு அவசியமானது என்பது இப்பொழுது பெரும்பாலா- னவர்களுக்குப் புரிந்திருக்கிறது. இருந்த போதும் அவர்கள் எல்லோரும் அதனைச் செய்வதேயில்லை.
அதற்குக் காரணங்களாக இவற்றைச் சொல்லலாம்.

• முக்கியமாகச் சோம்பல். பலருக்கும் தங்களது வழமையான வேலைகளைத் தவிர புதிய விடயங்களில் ஈடுபடுவதற்குத் தயக்கமும் சோம்பலும் இருக்கிறது.
• புதிய விடயங்களுக்கு நேரம் எவ்வாறு ஒதுக்குவது என்பது தெரிவதில்லை.
• எனது உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. எனக்கு ஏன் உடற்பயிற்சி என்பது பலரது விதண்டா விவாதம் ஆகும். கண்கெட்டாற் பிறகு சூரிய நமஸ்காரம் ஏன் எனப் பேச்சுக் சொல்வார்கள். நோய் வராமல் தடுப்பதற்கே முக்கியமாக உடற்பயிற்சி தேவை. நோய் வந்து முட்டிய பின் அல்ல.

உடற் பயிற்சிகளில் மிகவும் எளிதானதும், எல்லோராலும் செய்யக் கூடியதும், சுலபமானதும் நடைப் பயிற்சிதான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நடைப் பயிற்சியானது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்பதை பல மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஆனால் நடைப்பயிற்சிக்கும் அறிவாற்றல் குறையாது இருப்பதற்கும் தொடர்பு உள்ளது என புதிய மருத்துவ ஆய்வு சொல்கிறது.

65 வயதிற்கு மேற்பட்ட 300 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் தினமும் எவ்வளவு தூரம் நடக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

உடனடியாகவும், 9 வருடங்கள் கடந்த பின்னரும் அவர்களது மூளையை MRI ஸ்கான் செய்து பார்த்தனர். ஒவ்வொரு வாரத்தில் 6 முதல் 9 மைல் தூரம் நடந்தவர்களது மூளையிலுள்ள ஆரோக்கிய பகுதியின் (Gray matter) கனவளவு அதிகரித்திருக்கக் காணப்பட்டது.

எனவே இவர்களது அறிவு சார்ந்த செயற்பாடுகள் குறைவதற்கான சாத்தியங்கள் குறைவாகும். அதாவது மூளை மங்குவதற்கான சாத்தியங்கள் குறைவு.

ஆயினும் நடக்காதவர்களின் மூளையின் ஆரோக்கியமான பகுதியில் அவ்வாறான நல்ல மாற்றம் அவதானிக்கப்படவில்லை.

ஏற்கனவே செய்யப்பட்ட சில ஆய்வுகளின் மூலம் நல்ல உடற்பயிற்சிகள் செய்வதனால் கலங்களில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் என்பது தெரிய வந்தது. இப்பொழுது நடைப் பயிற்சியும் அவ்வாறே நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது தெரிகிறது.

வேறு எதற்காவது அல்லாவிடினும், எதிர்காலத்தில் அறளை பெயர்ந்து, பிள்ளைகளுக்கும் சொந்த பந்தங்களுக்கும் சுமையாகவும் தொல்லை கொடுக்காது இருப்பதற்காகவாவது தினசரி நடைப் பயிற்சி செய்யுங்கள்.
அறளை பெயர்தலைத் தடுக்க நவீன தொழில் நுட்பங்களில் ஈடுபாடு காட்டுவதும் உதவும்.
முது வயதில் மூளை மங்காதிருப்பதற்கு இன்றைய வாழ்விலிருந்து விடுபடாமல் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவது உதவும் என்பது முன்னொரு ஆய்வில் தெரியவந்ததை நினைவுபடுத்தலாம்.

கம்பியூட்டர், இணையம், மொபைல் போன் போன்ற நவீன சாதனங்களை, இவை எனக்கு முடியாதது என ஒதுக்கிவிடாது பயன்படுத்துவது நன்மை பயக்கும்.

பழவகைகள், நார்ப்பொருள் உணவுகள், இலைவகை உணவுகளை தினசரி உணவில் தாராளமாகச் சேர்ப்பதும் அவசியமாகும்.

நீரில் இறங்காமல் நீச்சலா?

பிரஸர், கொலஸ்ட்ரோல், நீரிழிவு என மூன்றும் கலந்துழலும் பெண் அவள். 5 அடி உயரத்தில் 80 கிலோ எடையும் சேர்ந்ததால் நிலைமை மேலும் மோசமாயிற்று. "நீங்கள் தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்" என்றவுடன் அவளது முகத்தில் கோபம் கொப்பளித்தது. "விடிஞ்சு பொழுது சாயுமட்டும் வீட்டிலை வேலை, வேலை... இதுக்கு மேலை என்ன பயிற்சி செய்யுறது."

இன்னுமொருவர் தனியார் துறையில் பொறுப்பு வாய்ந்த வேலையில் இருப்பவர். வேளையோடு வேலைக்குப் போனால் இரவான பின்தான் வீட்டிற்கு வர முடியும். உடற்பயிற்சி பற்றி யோசிக்கவே நேரம் இல்லையாம். உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி அவசியம் என்பதை இருவருமே அறிந்திருந்தார்கள். ஆயினும், நேரம் இல்லாததால் பயிற்சி செய்வதில்லை.

ஆனால், நீரில் இறங்காமல் நீந்தப் பழக முடியுமா?

உடற்பயிற்சி எல்லோருக்கும் அவசியம்தான். ஆனால், எவ்வளவு தேவை?
இதுபற்றிய மருத்துவர்களின் கருத்துகள் கூட காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது. "வாரத்தில் மூன்று நாட்களுக்கேனும் 20 நிமிடங்களாவது ஓடுவது போன்ற கடும் பயிற்சி தேவை" என 70- 80 களில் கூறினார்கள். ஆனால், 90 களில் கடும் பயிற்சி தேவையில்லை. வேகமாக நடப்பது போன்ற நடுத்தர வேகமுள்ள பயிற்சிகளை வாரத்தில் 5 நாட்களுக்கேனும் 30 நிமிடங்கள் வரை செய்ய வேண்டும் என்றார்கள்.
இப்பொழுது தினமும் 60 நிமிடங்கள் வரையான நடுத்தர பயிற்சி மீண்டும் என்கிறார்கள்.
எனவே, உடற்பயிற்சி அவசியம் என்பதை வைத்தியர்களும் சரி நோயாளிகளும் சரி ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், வைத்தியர்கள் சொல்லும் அளவிலான பயிற்சியைச் செய்ய பலருக்கும் முடிவதில்லை. உடலால் முடிவதில்லை என்பது ஒரு காரணம், நேரம் கிடைப்பதில்லை என்பது இரண்டாவது காரணமாகும்.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இரண்டு நாள் நண்பர்

இன்று காலை ஒரு மின்னஞ்சல் வந்தது. நண்பர் ரிஸ்டோ ஸெலேகெவிக் இறந்துவிட்டார். இரண்டு தடவை மட்டுமே சந்தித்த ஒருவர், ஆனால் அவரை மறக்க முடியவில்லை. குவைத்தில் லாரி அடித்து அந்த இடத்திலேயே மரணமாகிவிட்டார் என்று செய்தி சொன்னது.

முதல் தரம் ஒரு மதிய உணவின்போது ரொறன்ரோவில் அவரைச் சந்தித்தேன். ஐ.நா சபையின் ஒரு பிரிவில் நீண்ட காலம் வேலை செய்து ஓய்வு பெற்றவர். வயது எண்பதுக்கு மேலே இருக்கும். அழகான வெள்ளை மடிப்புக் கலையாத கோட்சூட்டில் அலங்காரமாக, இரண்டு கைகளையும் முழங்கால்களில் வைத்து நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருடைய சப்பாத்தும் வெள்ளை நிறம். தன்னுடைய முழுப்பெயரையும் சொல்லி அறிமுகப்படுத்தினார். திருப்பிச் சொல்லமுடியாத சங்கடமான பெயர். என்னுடைய பெயரைச் சொன்னேன். என்னுடைய நாடு என்னவென்று கேட்டபோது அதையும் சொன்னேன். அவருடைய நாடு என்ன என்று கேட்பதாக நினைத்து உங்கள் தாய்மொழி என்னவென்று கேட்டேன். அப்பொழுதுதான் அதிர்ச்சி ஏற்பட்டது. மாசிடோனியன் என்றார். நீங்கள்தான் நான் சந்திக்கும் முதல் மாசிடோனியன் என்று உணர்ச்சிவசப்பட்டு மறுபடியும் கைகுலுக்கினேன். என்னுடைய பரபரப்பை பார்த்த அவர் முகத்தில் பயக்களை தோன்றியது. தன்னைச் சுருக்கிக்கொண்டார். பின்னுக்கு ஒருமுறை திரும்பிப் பார்த்து ரகஸ்யமான குரலில் சொன்னார் 'பலர் நினைக்கிறார்கள் மாசிடோனியன் மொழி அழிந்துவிட்டது என்று. கிரேக்கர்கள் எவ்வளவு முயன்றும் அதை அழிக்க முடியவில்லை. இன்னமும் இயங்குகிறது' என்றார்.

சிறிய நாடான மாசிடோனியா அரசனுக்கும் கிரேக்க அழகி ஒலிம்பியாவுக்கும் பிறந்தவன் அலெக்சாந்தர். கிரேக்கரான அரிஸ்டோட்டல் அவனுடைய குரு. இளவயதில் ஆட்சிக்கு வந்து 33 வயதிலேயே இறந்துபோனாலும் உலகத்தில் பாதியை பிடித்து தன் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்திருந்தான். இதுவெல்லாம் நான் ஏற்கனவே படித்தது. நான் படிக்காத ஒன்றை ரிஸ்டோவிடம் கேட்டேன். 'அலெக்சாந்தர் என்ன மொழி பேசினான்?' அவர் சொன்னார் 'அப்பொழுதெல்லாம் கிரேக்கம் உலக மொழி. மாசிடோனியன் சிறிய மொழி. தன் நாட்டு படைவீரர்களுடன் மட்டும் அலெக்சாந்தர் மாசிடோனியன் பேசினான். உலகத்தோடு பரிமாறிய மொழி கிரேக்கம்' என்றார்.

மாசிடோனியா மிகச் சிறிய நாடு. யூகொஸ்லேவியா உடைந்தபோது 1991ல் சுதந்திரம் பெற்று தனிநாடாக ஆகியது. அங்கே ஒன்றரை மில்லியன் மக்கள் மாசிடோனியன் பேசுகிறார்கள். 'அலெக்சாந்தர் பேசியது உங்களுடைய மொழி. இப்பொழுது நாடும் கிடைத்துவிட்டது. 'நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்' என்றேன். அவருடைய வெள்ளை முகம் சூரிய வெளிச்சத்தில் சிவப்பாக மாறிக்கொண்டு வந்தது. 'ஆனால் பகை உண்டு. எங்கள் மொழி வளர்வது கிரேக்கர்களுக்கு பிடிக்கவில்லை' என்றார். அலெக்சாந்தர் இருபது வயதில் அரசனானதும் முதலில் படையெடுத்தது கிரேக்க நாட்டின்மீதுதான். அந்தப் போரில் 6000 கிரேக்க வீரர்கள் கொல்லப்பட்டார்கள். 30,000 பேர் அடிமைகளாக்கப்பட்டார்கள். இது நடந்தது 2300 வருடங்களுக்கு முன்னர், ஆனால் கிரேக்கர்கள் அதை இன்றுவரை மறக்கவில்லை. மாசிடோனியன் பெயர்களை எல்லாம் ஒரு காலத்தில் கிரேக்கப் பெயர்களாக மாற்றினார்கள். மாசிடோனிய மொழி பேசுவதைக்கூட சட்ட விரோதமான காரியமாகப் பார்த்தார்கள்.

'மாசிடோனியன் எழுத்தை வாசிப்பீர்களா?' என்று கேட்டேன். அவர் ஒன்றுமே பேசவில்லை. வெள்ளையான அவர் முகம் கறுப்பானது. என்னுடைய முகவரியை கேட்டு ஒரு துண்டுப் பேப்பரில் எழுதிவைத்துக்கொண்டு விடைபெற்றார். சிலநாட்கள் கழித்து எனக்கு ரிஸ்டோவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ரொறன்ரோவில் வெளிவரும் மாசிடோனியன் வார இதழை எனக்கு அனுப்பியிருந்தார். ஒரு சின்னக் குறிப்பும் இருந்தது. 'இதுதான் மாசிடோனியன் மொழி. இதை வாசிப்பவர்களும் இதில் எழுதுபவர்களும் இங்கே இருக்கிறார்கள்.'

இரண்டாவது சந்திப்பின்போதும் அதே மாதிரி அழகான வெள்ளை கோட்சூட்டில், முழங்கால்களில் கைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவருடைய நண்பர் சொன்னார் அவர் எப்போதுமே அப்படித்தான் உடை உடுப்பார் என்று. பரவசத்தோடு என் கைகளைப் பிடித்து குலுக்கினார். அளவற்ற சந்தோசத்தில் இருந்தார். தன்னுடைய மகன் தன்னை அழைத்திருப்பதாகவும் அவரைப் பார்க்க குவைத்துக்கு போக திட்டமிடுவதாகவும் சொன்னார். 'உங்களுக்கு யாரும் மாசிடோனியாவில் இல்லையா?' என்றேன். உடனேயே அவர் முகத்தில் இறுக்கம் தெரிந்தது. எதையோ கண்டு மிரண்டதுபோல ஒருமுறை பின்னால் திரும்பிப் பார்த்தார். 'நான் குவைத்தில் என்னுடைய மகனைப் பார்த்துவிட்டு கனடாவுக்கு திரும்பும் வழியில் மாசிடோனியாவுக்கு முதல்முறையாக போகப்போகிறேன். அங்கே மாசிடோனியன் மொழியில் உரையாடுவேன். இறப்பதற்கு முன்னர் என் சொந்த நாட்டை ஒருமுறையாவது பார்த்துவிடுவேன்' என்றார்.

இப்பொழுது மின் கடிதம் வந்திருக்கிறது. குவைத்தில் மகனுடன் சில நாட்களைக் கழிக்க போயிருந்தார். வழக்கம்போல காலை நடைபயில வெளியே புறப்பட்டுப் போனபோது ஒரு லாரி வந்து அடித்து அந்த இடத்திலேயே குப்புற விழுந்து மரணமானார்.

நண்பா, ஒரு முறை திரும்பிப் பார்த்திருக்கலாமே!●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்



# மனமே! நலமா? 33

பேயா யுழலுஞ் சிறு மனமே
பேணாயென் சொல் இன்று முதல்
நீயா யொன்றும் நாடாதே
நினது தலைவன் யானே காண்!

- பாரதி

இந்தப் பூமியின் புவியீர்ப்புச் சக்தி பூமியின் மேலிருக்கும் எல்லாப் பொருட்களையும் தன்னை நோக்கி இழுத்துக் கொள்வதைப்போல் நம் மனமும் நாம் எந்த ஒரு முயற்சியில் ஈடுபட்டாலும் நம்மை அதன்போக்கில் ஈர்த்துவிடும். எனினும் பாரதி “நினது தலைவன் யானே காண்” எனக் கூறியது அவரது உச்சமான ஆளுமையை காட்டுகிறது. மரணத்தின் வியாபாரி என்று அழைக்கப்பட்ட ஆல்ப்ரெட் நோபல் மிகப்பெரிய அளவில் அழிவை ஏற்படுத்தக்கூடிய பயங்கரமான TNT வெடி மருந்துப் பொருளைக் கண்டுபிடித்தவர். இவரது மனம் எப்படி மாறிப்போனது என்பது ஓர் அதிசயம். இவரே “நோபல் அறக்கட்டளை” நிறுவனத்தையும் உருவாக்கியவர். இவரது ஒரேயொரு கண்ணோட்டம் அல்லது மனமாற்றம், உலகின் தலையாய பாராட்டு பெற்றதென நாம் கருதும் “நோபல் பரிசு” உருவாக காரணமாயிற்று. “சமாதானத்தின் தூதுவர்” ஆனவரும் அவரேதான்.

மனத்திலிருந்து உருவாகியது மனப்பான்மை (attitude). இது ஒருவரிடம் எப்படி உருவாகிறது என்பதே ஒரு முக்கிய ஆய்வுப் பொருள். இது பிறப்பிலேயே நிர்ணயிக்கப்படுகிறதா? பெற்றோர், முன்னோர்களின் மரபுவழியாக (Genetically) நம்மை வந்து அடைகிறதா? அல்லது நமது வளர்ப்பில் (up-bringing) வடிவமைக்கப்படுகிறதா? என்பது புதிராகவே உள்ளது.

மனப்பான்மை என்பது எமது நம்பிக்கைகளின் கலவைதான். நமக்கு எதுவுமே வராது என்று நமக்குள் நாம் வளர்த்துக் கொண்ட நம்பிக்கைகளின் தொகுப்புத்தான் மனப்பான்மை. எனவே மனமும் நம் எண்ண ஓட்டத்தை ஒவ்வொரு முறையும் நிர்வகிக்க தேவையில்லாமல் மனப்பான்மை என்ற பரப்புக்களை ஏற்படுத்தி தன் வேலையை சுலபமாக்கிக் கொள்கிறது. மீண்டும் மீண்டும் நாம் சிந்திப்பவை எல்லாம் நம்பிக்கையாக இறுகிவிடுகிறது. ‘என்னால் முடியும்’ என்ற எண்ணத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டால், அதுவே நாளடைவில் திடமான நம்பிக்கையாகி விடுகிறது.

தேர்வு செய்யும் சக்தி என்பது (Power of choose) நாம் பெற்றிருக்கும் அனைத்து சக்திகளிலும் மிகவும் சிறந்தது. இந்த தேர்வுகள் அனைத்தும் மனப்பான்மையின் விளைவுகள்தான். அழகான சிலையொன்றில் பளிங்கு கற்களை சிலர் காண்பர். சிலர் பளிங்கு கற்களில் சிலையைக் காண்பர். இதுவே மனப்பான்மை வேறுபாட்டின் இரகசியம். மேன்மையான மனப்பான்மை பொருந்தியிருந்தால் மேன்மையான தேர்வுகளை தெரிவு செய்வோம். இதன்பயனாக உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். ‘உயர்ந்த படிப்பு வேறு உயர்ந்த மனப்பான்மை வேறு’.

மீண்டும் சந்திப்பேன்!●

## உலகில் வயதானவர் 116 வயதில் மரணம்

உலகில் மிகவும் வயதானவரும், கின்னர்ஸ் புத்தகத்தில் பதிவு பெற்றவருமான ஜப்பானின் ஜிரொமொன் கிமுரா தமது 116வது வயதில் கடந்த மாதம் 12ஆம் திகதி மரணமானார். இளமைக் காலத்தில் தபால்துறை ஊழியராகக் கடமையாற்றிய இவர், அதிக நேரம் சூரிய ஒளியின் கீழ் நின்றதாலேயே தாம் நீண்ட காலம் வாழ்ந்ததாக கடந்த வருடம் தமது 115வது பிறந்த நாள் விழாவின்போது தெவித்திருந்தார். இவருக்கு 7 பிள்ளைகளும், 14 பேரக்குழந்தைகளும், 15 கொள்ளுப்பேரர்களும் இருந்தனர். 2011ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் ஐம்பதாயிரம் பேர் நூறு வயதைத் தாண்டி ஜப்பானில் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

## 2028ம் ஆண்டளவில் இந்திய சனத்தொகை சீனாவை விஞ்சும்!

இந்தியாவின் சனத்தொகை அடுத்த 15 ஆண்டுகளில் (2018 அளவில்) சீனாவின் சனத்தொகையை விஞ்சுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வேளையில் இரண்டு நாடுகளின் சனத்தொகையும் சேர்ந்து 45 கோடியாகவிருக்குமென ஐ.நாவின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போகப்போக சீனாவின் சனத்தொகை குறையுமென்றும், இந்தியாவினது 2050ம் ஆண்டு வரை அரிகரித்துக்கொண்டே போகுமென்றும் ஐ.நா மதிப்பிட்டுள்ளது. தற்போது 700 கோடியாகவுள்ள உலகின் சனத்தெகை 2050 ஆண்டளவில் 940 கோடியாக அதிகரிக்கலாமெனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

## ரி.ரி.சி தலைவருக்கு 110 டாலர் தண்டம்

ரொறன்ரோ போக்குவரத்துச் சபையின் (ரி.ரி.சி) தலைவரும் ரொறன்ரோ நகரசபையின் உறுப்பினருமான கரேன் ஸ்ரின்ற்ஸ், சிவப்பு விளக்கு எரியும்போது அதனையும் மீறி வீதியில் சைக்கிள் ஓட்டிய குற்றத்துக்காக 110 டாலர் தண்டப்பணம் செலுத்தும் சிட்டையைப் பெற்றுள்ளார். கடந்த மாதம் 27ஆம் திகதி யங்&எக்லின்ரன் வீதிச் சந்திப்பில் இது இடம்பெற்றது. முன்னரும் ஒரு தடவை இதே குற்றத்துக்காக இவர் பொலிசாரால் எச்சரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# இளையோரைப் பலியெடுக்கும் மனநோய்கள்

இங்குள்ள இரண்டாம் தலைமுறையினரைப் பார்க்கும்பொழுது அவர்களைப்போல் வாழ்க்கையை அனுபவிப்பவர்கள் ஒருவருமே இருக்க மாட்டார்கள் எனத் தோன்றுவது இயற்கை. இரண்டாம் நிலைப் பாடசாலை வாழ்க்கை முடிந்தவுடனேயே வாகன வசதி, பலவித-மான நவீன தொடர்பு சாதனங்களின் உடைமை, சிலசமயங்களில் தனக்கென ஒரு வதிவிடம் முதலிய சகல சௌபாக்கியங்களையும் அனுபவித்தபடி சந்தோஷமாகவும், சுதந்திரமாகவும் இளம் வயதினர் வாழ்வதாகவே நாம் கருதுகிறோம். ஆனால் பல கட்டிளமைப் பருவ மாணவர்கள் மன அழுத்தம், மனநோய்கள் முதலியவற்றால் பாதிக்கப்படுவதையும், இதன் காரணமாகச் சில மாணவர்கள் தற்கொலை செய்வதையும் காணக்கூடியதாக உள்ளது. "என்ன குறை வைத்தோம், ஏன் இந்தப் பிள்ளை இப்படித் தன்னைத் தானே அழித்துக் கொண்டான்" எனப் பெற்றோரை ஏங்க வைக்கிறார்கள்.

மனநோய்களையும், தற்கொலைகளையும் இளைஞர்கள் மத்தியில் தடுப்பதற்கான பயிற்சி நிரல்களை பல்கலைக்கழகங்களிலும், சமூகக் கல்லூரிகளிலும் வழங்குவதற்காக ஹம்பர் கல்லூரிக்கு (Humber College) 75,000 டாலர்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இந்த நிரல் Mental Health First Aid (MHFA) என அழைக்கப்படுகிறது. அதாவது மனநோய்க்கான முதல் உதவி. ஏனைய உடல் நோய்களுக்கு முதல் உதவி இருப்பதுபோல் மன நோய்களுக்கும் முதல் உதவி இருப்பது பலருக்கும் தெரியாது. மனநோய்களினால் பாதிக்கப்பட்டவர்களை நேரத்தோடு அடையாளம் கண்டு அதனால் ஏற்படும் பாரிய தாக்கங்களில் இருந்து அவர்களைச் சூழ உள்ளவர்களினால் காப்பாற்ற முடியும். பொதுவாக மனநோய்களினால் பாதிக்கப்பட்டவர்களைச் சூழ உள்ளவர்கள் அவர்களுக்கு உதவுவதை விட்டு விலகியே இருக்கிறார்கள். தற்கொலைகள் நடைபெற்ற பின்பே "அப்படிச் செய்திருக்கலாம், இப்படிச் செய்திருக்கலாம்" என அங்கலாய்க்கிறார்கள். ஹம்பர் கல்லூரியின் கல்வி அதிகாரிகளில் ஒருவராகிய Jim McMillan முதலில் இப்பிரச்சனை பற்றிய விழிப்புணர்ச்சியை (Awareness) மாணவர்கள் மத்தியில் அறியத் தருவதே தங்கள் நோக்கம் எனக் கூறுகிறார். பின்பு இப் பிரச்சனையை கையாளுவதற்கு வேண்டிய துணிவு, திறன் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்கி (Create a community with the skills and confidence to intervene) அவர்கள் மூலம் உயர் கல்வி நிறுவனங்களில் ஒரு மனத் தைரியமான மாணவர் சமூகத்தை (Mentally Healthy Society) தோற்றுவிப்பதே MHFA யின் நோக்கமாகும். முதலில் இந் நிரல் ஒன்ராறியோ மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்பு கனடா முழுவதும் வழங்கப்பட இருக்கிறது.

உயர்கல்வி நிறுவனங்களில் மன அழுத்தம் ஒரு சாதாரண விடயமாக உள்ளது. பலர் இதனால் தமது கற்கை நெறிகளை இடையிலேயே நிறுத்தி விடுவதாக McMillan கூறுகிறார். உயர்கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்வதற்கு உதவுவது MHFA யின் நோக்கமாகும். உயர்கல்வி நிரல்களை பூர்த்தி செய்யாமல் இடையில் விலகும் மாணவர்களின் தொகை கிட்டத்தட்ட 40 வீதமாகும். இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் மன அழுத்தம் ஒரு முக்கிய காரணமாக காணப்படுகிறது. இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்விக்கும் உயர்கல்விக்கும் இடையே உள்ள பாரிய இடைவெளி மாணவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. சில மாணவர்கள் தமது குடும்பப் பொருளாதார நிலை காரணமாகப் பகுதிநேர வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகிறார்கள். சில மாணவர்கள் பிரயாணக் கஷ்டங்களையும், வீட்டுப் பொறுப்புகளையும் அனுபவிக்கிறார்கள். அது மாத்திரமல்ல இன்றைய தொழிற்சந்தையில் மாணவர்களின் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ற தொழில்களைப் பொறுவதும் அவ்வளவு சுலபமல்ல. இவற்றின் தாக்கம் (Frustration) மனநோயை ஏற்படுத்துகிறது.

Humber College இன் Mental Health First Aid 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 400 ஹம்பர் கல்லூரியைச் சார்ந்தவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்-பட்டுள்ளது. 2015க்கு முன்பாக 2700 உயர்கல்வி நிறுவன ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க உள்ளனர். இதனால் பல உயர்கல்வி மாணவர்கள் பலனடைய முடியும். MHFA Canada வின் தலைவா Meaghon Reid – மனநோய்களுக்கு முதல் உதவி வழங்குவது இன்றியமையாதது என்கிறார். உடல் உபாதைகள் ஏற்படும் பொழுது எப்படி முதல் உதவி வழங்க முடியுமோ, அதே மாதிரி மனநோய்களின் அறிகுறிகளையும் அடையாளம் கண்டு முதல் உதவிக்கான பயிற்சி நெறிகள் வழங்கப்படுவதாகவும், ஆனாலும் இவ்வாறு பயிற்றப்பட்டவர்கள் நோயை மாற்றக்கூடிய நிபுணர்கள் (Therapists) அல்ல" என்றும் கூறுகிறார். எவ்வாறு உடல் உபாதைகளுக்கு முதல் உதவி செய்த பின்பு வைத்தியரின் உதவியை நாடுகிறோமோ, அதேபோல் MHFA யின் பயிற்சி பெற்றவர்களும் மனநோயினால் பாதிக்கப்படும் சக மாணவர்களுக்கு அவர்களது கற்கை நெறிகளில் இருந்து விலகாமல் இருக்க உதவுவார்கள். ஆயினும் மனநோய்க்கு ஏற்ற வைத்தியத்தை அதற்கு உரிய வைத்தியர்தான் வழங்குவார். பல மாணவர்கள் வைத்தியர்களின் உதவியை நாடாமலே தமது வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு நடக்காமல் இருப்பதற்கு இப்பயிற்சியாளர்களின் தொடர்பு (Interference) உதவுகிறது.

உயர்கல்வி நிறுவனங்களில் மாத்திரமல்லாது இன்று இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் "தற்கொலை" என்ற ஒரு தொற்றுநோய் (Contagious disease) பரவி வருகிறது. Dr. Ian Colman (Canada Research Chair in Mental Health) 12 – 17 வயதுக்கு இடைப்பட்ட 20,000 மாணவர்கள் மத்தியில் நடத்திய ஆய்வின் அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். அதில் தமது சகாக்கள் தற்கொலை செய்வதை காணும் மாணவர்கள், ஏனைய மாணவர்களிலும் பார்க்க ஐந்து மடங்கு பாதிப்பு அடைகிறார்கள் என்றும், இத்தகைய மனநிலை இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாகவும் கூறுகிறார். 15 – 24 வயதிற்கிடைப்பட்ட மாணவர்கள் மத்தியில் ஏற்படும் மரணங்களில் 24% தற்கொலைகளாக அமைந்துள்ளது. பல குடும்பங்-களில் தற்கொலையை ஒரு இழுக்காகவே (Stigma) இன்றும் கருதுகிறார்கள். இதனை அடையாளம் காணுவது மிகவும் கடினமாக உள்ளது. இதற்கு வைத்தியம் உண்டு என்பதைப் பலரும் உணர்வதில்லை (Treatable by medication and psycho-therapy).

தென்கிழக்கு ஆசிய சமூகத்தவர்களிடையே ஏற்படும் மனநோய்களுக்கு முக்கிய காரணியாக அமைவது பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே ஏற்படும் தொடர்பு இடைவெளி (Communication Gap) யாகும். எமது பெற்றோரிடம் இருந்து நாம் கற்றுக் கொண்ட பிள்ளை வளர்ப்பு முறைகள் யாவும் இன்றைய வட அமெரிக்க சமூகத்திற்குப் பொருந்துவதாக இல்லை. இதனால் பிள்ளைகளோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் பெற்றோரால் கூட இன்றைய Cyber Bullying (கணினி மூலம் துன்புறுத்தல்) Gay Bashing (ஓரினச் சேர்க்கைக்காக துன்புறுத்தல்) முதலியவற்றை எவ்வாறு கையாளுவது எனத் தெரியாது திண்டாடுகிறார்கள். பலவிதமான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் உள்ளன. பெற்றோரும் தமது பிள்ளை வளர்ப்புத் திறன்களை விருத்தி செய்தல் அவசியமாகும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# வீட்டுக்குள் வாசம்

கோடை காலம் ஆரம்பித்துவிட்டாலே பலரது மனங்களில் தோட்டக்கலை நாட்டமும் முகிழ ஆரம்பித்துவிடும். தொடர் மாடி கட்டிடங்களின் குறுகலான பகுதிகளை கூட விசாலமாக அலங்கரிப்பது மரந்தான்! அதன் அழகினை எவன்தான் மறந்தான்!

வீட்டுக்குள் வளர்க்கப்படும் செடி கொடிகள் வீட்டுக்குள் சுழலும் காற்றினை சுத்திகரிப்பதுடன் புத்துணர்வையும் வளர்க்கின்றன. செடி கொடிகள் வீட்டுக்குள் வளர்ப்பதற்கு பல காரணங்கள் உள. சிலர் ஆன்மீகம் வளர்க்கின்றார்கள். சிலர் மருத்துவம் வளர்க்கின்றார்கள். சிலர் தமது குழந்தைகளிடம் மகிழ்ச்சியை வளர்க்கின்றார்கள்.

அதனால்தான் பழுப்பும் பச்சையுமாய் ஈரமண்ணில் சருகுகளோடு விதவிதமாய் வெளியே பார்த்த பல குறுஞ்செடிகள் வீட்டுக்குள் ஜன்னல் ஓரமாய் தொட்டிகளிலும் சாடிகளிலும் இலையசைத்து இயற்கையின் முகவரியை கற்பிக்கின்றன.

அதனால்தான் ஆன்மீகம் வளர்ப்பவர்கள் வீட்டில் அறுகம் புல்லும் துளசியும் வெள்ளெருக்கும் மருத்துவம் வளர்ப்பவர்கள் வீட்டில் தூதுவளையும் கற்பூரவள்ளியும் பொன்னங்கண்ணியும் இயற்கையோடு இணைந்த சூழலை ஏற்படுத்துகின்றன. மணிபிளாண்ட் பல இல்லங்களில் பணத்தாசையை வளர்க்கின்றது. அதிர்ஷ்ட மூங்கில் தெரிந்தோ தெரியாமலோ சீன கலாசாரத்தை வேரிடுகின்றது.

வாடமல் கசங்காமல் வளராமல் மூலைக்கு மூலை வைக்கப்படும் வண்ணவண்ண அலங்காரச் செடிகளின் செயற்கையிலும் பார்க்க இப்பொழுதெல்லாம் வீட்டுக்குள் வாசம் செய்யும் உயிர்தாவரங்கள் பூத்துப் புன்னகைத்து செழிப்புடன் வனப்பைக்காட்டுகின்றன.

அவை வீட்டினுள் குளிர்மையை ஊட்டுகின்றன. வெம்மையை தமக்காக்கிக் கொள்கின்றன. கரியமில வாயுவை உட்கொண்டு உயிர் வாயுவை அறைகளில் நிரப்புகின்றன.

முக்கியமாக வீட்டில் உள்ள சிறு பிள்ளைகளின் மனப்போக்கில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. தினமும் அதிகாலை எழுவார்கள். முகம் கழுவ முன்பாகவே தமது செடிகள் நன்றாக உள்ளதா என்று ஓடோடிப்போய் மகிழ்வுடன் பார்ப்பார்கள். முதல் நாள் தாம் உணர்வோடு தண்ணீர் ஊற்றியவை மறு நாள் உயிரோடு துளிர்த்திருந்தால் பரவசம் அடைவார்கள். அவற்றின் இலைகள் சிரிப்பதைக்கண்டு சிலிர்ப்பார்கள். விரைவிலே அவை பூப்பின் பூரிப்பார்கள். பின்பு காய்கள் கனியானாலும் அதில் தேடித்தேடி தாம் வளர்த்த உறவை அடையாளம் கண்டு பெருமிதத்துடன் பெரிதும் சுவைப்பார்கள். விசாலமாக வீட்டு வளவுகளில் பெற்றோர் காய்கறி தோட்டமிட்டிருப்பினும் வீட்டுக்குள் சிறுவர் பராமரித்த ஒரு தக்காளி மரமோ வெண்டையோ அல்லது வேறெதுவோ இயற்கை வளங்களைக் காக்க இயற்கையோடு இணைய அவர்களுக்கு ஆரம்ப பாடமே நடத்திவிடுகின்றது. வீட்டினுள் வீசும் காற்றை தூய்மைப்படுத்துவதில் முன்னணி வகிப்பதாக சில குறுஞ்செடிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

கிராமங்களில் அநாதரவாகக் கிடந்த தரிசு நிலங்களில் பாம்பு இருக்கும் என பயப்பட்ட அல்லது பாம்பு இருக்கப் பயப்பட்ட கற்றாழை (aloe vera) விஞ்ஞானிகள் பார்வை பட்டு தற்பொழுது வீட்டுக்குள் வந்துவிட்டது. மருத்துவக்குணங்கள் உள்ளதாகவும் காற்றில் கலந்துள்ள (Formaldehyde) என்ற நஞ்சினை உறிஞ்சும் என்றும் சான்று கூறும் விஞ்ஞானம் தீப்புண்களுக்கும் மருந்தாகும் என நமது ஆயுர்வேதம் அன்று உரைத்ததையும் இன்று உறுதிப்படுத்துகின்றது.

மாமியாரின் நாக்கை (mother in law's tongue) பார்த்திருப்பீர்களா? இதென்ன வம்பாய்ப் போச்சு என்றே பார்க்காதவர்கள் பதிலளிப்பர். ஆனால் அது கூட வீட்டின் வறண்ட சூழ்நிலையை மாற்ற வல்லது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? காற்றில் கலந்துள்ள Nitrogen oxide, Formaldehyde போன்றவற்றையும் அது தனதாக்கி விடுவது விசித்திரம். அடடா..சொல்ல மறந்து விட்டேனே! அதற்கு snake-plant என்றொரு பெயரும் சமுதாயத்தில் உண்டு. சர்வசாதாரணமாக வீடுகளிலும் அலுவலகங்களிலும் காணப்படும். மட்டைகளை நிமிர்த்தி அடுக்கியது போலிருக்கும். நடுவில் பச்சையையும் விளிம்பில் மஞ்சளையும் நிறமாக்கியது.

காற்றைத் தூய்மைப்படுத்துவதில் கோல்டன் போத்தோஸ் (golden pothos) பெரும் பங்காற்றுகின்றது. காற்றில் செறிந்திருக்கும் Carbon monoxide வாயுவை வேகமாக உள்ளிழுத்து சூழலை சுத்திகரிக்கும். சிறிய தென்னங்கன்றுகள் போல் தோற்றமளிக்கும் மலைப்பனை (bamboo palm) எம்மவர்களின் விருப்பத் தெரிவாக வீட்டுக்குள் வளர்க்கப்படுகின்றது. (Formaldehyde, Trichloroethylene) என்ற நஞ்சினை உறிஞ்சுவதுடன் இயற்கையான ஈரப்பதனியாகவும் செயல்படுவது.

Benzene, Trichloroethylene போன்ற அதிகமான அசுத்தக்காற்றை உள்ளிழுத்து அதிகமான உயிர் வாயுவை வெளிவிடுகின்றது சீமை ஆல் (rubber plant). வெள்ளால் (weeping fig) உயிர் வாயுவின் அளவை காற்றில் அதிகரிக்க வல்லது.

மண் தொட்டியில் செடி கொடிகளை பயிரிடுவதே சிறந்தது. அளவுக்கு அதிகமான நீரை உறிஞ்சும். மீதமுள்ள நீர் சிறு துளை ஊடாக வெளியேறும். பிளாஸ்டிக் தொட்டிகள் நீரை தேக்கும். அதனால் வேர் அழுகி வளர்ச்சி குன்றும்.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# அகதி என்ற சொல்லின் அர்த்தம் தேவை

5

'உயிர்வாழ்வுக்கான அச்சுறுத்தல்' என்ற காரணத்தை முதன்மையாகக்கொண்டு புலம்பெயர்ந்து வருவோரை ஏற்கின்ற நாடுகளுக்கும், அவ்வாறு தஞ்சம் கோரியோருக்கும் 'அகதி' அல்லது 'ஏதிலி' என்ற சொல் பழக்கப்பட்டிருந்தது. 1983க்குப் பின்னால் புலம் பெயர்ந்த ஈழத்தமிழருக்கு இச்சொல் புதிது.

தொடக்ககாலத்தில் இச்சொல்லின் ஆழ அகலத்தை நம்மிற் பலரும் சரியாகப் புரிந்திருக்கவில்லை. குறிப்பிட்ட இந்த நாடுகளுக்குள் நுழைந்துவிட்டால் எப்படியும் வாழ்ந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு நம்மவர் வந்தனரே தவிர, தடம் பதித்த தொடக்க காலத்தில் ஏகப்பட்ட சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என எண்ணியிருக்கவில்லை.

உயிர் அச்சுறுத்தல் என்ற காரணங்களைக் கடந்து பொருளாதார. அரசியல் அகதிகளாகவும் பலர் குறிப்பிட்ட இந்த நாடுகளுக்குள் நுழைந்தனர். சரியானவர்களை இனங்கண்டு அகதித்தகுதியை வழங்குவது இந்த நாடுகளுக்குப் பெரிய சிக்கலாகவிருந்தது. எல்லைகள் கடந்து சட்டவிரோதமாக நுழைவோரைக் கையாள ஒவ்வொரு நாடுகளும் வகைவகையான சட்டங்களை வைத்திருந்தன. உரிய ஆவணங்களின்றி எல்லை கடந்தோரைச் சட்டவிரோதக் குடிவரவாளர் எனக் கருதிப் பல ஆண்டுகள் சிறையில் அடைத்தன. வேறு சில இடங்களில் உடனடியாகவே இக் குடிவரவாளர் நாடுகடத்தப்பட்டனர். சில இடங்களில் தண்டம் அல்லது பிணைப்பணம் கட்டப் பணிக்கப்பட்டனர். சில நாடுகள் தற்காலிக விசாக்களை வழங்கி வந்தோரை உடனடியாக ஏற்றுக்கொண்டன.

தொல்லைகள் பலவற்றைக் கடந்து குறிப்பிட்ட நாட்டை வந்தடைந்த பின்னரும் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாத அவலந்தான் பலருக்கும் வாய்த்திருந்தது.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் பல விசாரணைகளுக்குப் பிறகு தற்காலிக விசாவைப் பெற்றுக்கொண்டாலும், அந்த நாட்டின் எல்லைகளைக் கடந்து செல்வதற்கு அந்த விசாக்கள் பயன்படவில்லை. தாயகத்தில் குடும்ப உறவுகளுக்குள் ஏற்பட்ட இழப்புகளுக்கு கொள்ளி வைக்கக்கூட போகமுடியாத நிலை.
இந்தத் தயரங்களை இளவாலை விஜேந்திரன் தன் கவிதைகளில் பின்வருமாறு கூறுகின்றார்:

எனக்கு விசா தந்த அதிகாரி
மனைவிக்கு
விசா தர மறுக்கின்றான்
யாழ்ப்பாண வடலிகளின் நிழலில்
அம்மம்மா
போய்ச்சேர்ந்துவிட்டாலும்
சென்று திரும்பல்
இயலுமோ சொல்
ரொறன்ரோவில், லண்டனில்
எனது சதைகளும் இரத்தமும்
ஆன சகோதரங்கள்
எந்தத் தூதரகத்திலும்
எனது நிறத்தை நம்பத் தயாரில்லை.

'அகதி' என்ற சொல்லின் அர்த்தம் தேவை.
நான் விரும்பும் யாரையும் பாராமல்
வெறுப்பு மிகும் முகங்களையே
பார்க்கும் விதி எனக்கு.

வேற்றுக்கிரகத்து மனிதனாய்
இந்தப் பூமிப்பந்தில்
வாழும் எனக்கு
'அகதி' என்ற சொல்லின் அர்த்தம் தேவை.

விசா மறுக்கப்படுகின்ற அவலங்களையும் இறப்புகளுக்குக்கூடச் செல்லமுடியாத கொடுமையையும் இக்கவிதை பதிவுசெய்திருக்கின்றது. உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழன் எல்லாத் தூதரகங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் பார்க்கப்படுகின்றான். தமிழனை, தமிழனின் நிறத்தை எவரும் நம்பத்தயாரில்லை.

அகதித்தகுதியை நாடுகள் தந்துவிட்டாலும் வேற்றுக்கிரக மாந்தராகவே அந்தந்த நாடுகளுக்குள் பார்க்கப்பட்டிருக்கின்றார்கள். அப்படியாயின் 'அகதி' என்ற சொல்லின் பொருள் என்ன? என்று வினவுகின்றார் கவிஞர். சிரமமின்றி வாழ்வதற்குரிய போதிய ஆவணங்களும் இல்லாமல், நிறக் காழ்ப்புணர்வுக் கொடுமைகளையும் சந்தித்தபடியே ஒவ்வொரு அடியையும் இந்தப்புலங்களில் எடுத்து வைத்தனர்.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த மண்ணை விட்டு, சொந்த பந்தமென அத்தனை உறவுகளையும் பிரிந்து, ஒடி உயிர் பிழைக்க வந்த பின்னாலும் தொடர்ந்த அவலங்களில் தொலைந்தவர்கள் அநேகம் பேர் இருந்தார்கள்.

மாட மாளிகைகள் நிறைந்த, வசந்தகாலப் பூக்கள் பூத்துக்குலுங்கிய வீதிகளில், வெறுமையைச் சுமந்து, உணர்வுகள் உருக்குலைந்து, தனிமையின் துணையோடு வாழ்வை இழந்தவர்களின் வரலாறுகளில் இருந்துதான் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் இருப்பு கட்டியெழுப்பப்பட்டது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## உள்ளூர் மக்களுக்கான சைக்கிளோட்டப் போட்டி

யாழ்நகரிலுள்ள ஒரு சனசமூக நிலைய வருடாந்த விழா அண்மையில் நிகழ்ந்தது. அதன் பிரதான நிகழ்ச்சிகளில் ஒன்று உள்ளூர் மக்களுக்கான சைக்கிளோட்டம்.

அந்த ஊரில் முகாமிட்டிருக்கும் ராணுவச் சிப்பாய்கள் சிலர் அதில் பங்குபற்ற விரும்பி, பெயர்களைப் பதிவு செய்யச் சென்றபோது பிரச்சனை எழுந்தது.

'இது உள்ளூரின் நிரந்தர வாசிகளுக்கான போட்டி' என்று மிகவும் சிரமப்பட்டு எடுத்துச்சொல்லி அவர்களைத் தவிர்க்க முயற்சி எடுத்தபோது, 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை'யாக நிலைமை மாறியது.

"யார் உள்ளூர் நிரந்தரவாசிகள்? நீங்க எல்லாம் 1995லை வன்னிக்குப் போய் எப்ப வந்தனீங்கள் எண்டு எங்களுக்குத் தெரியும். ஆனா நாங்கதான் இங்கை தொடர்ந்து இருக்கிறம் தெரியுமா?" என்று சிங்கள ராணுவம் திருப்பிக் கேட்டபோது...

இறுதியில், சைக்கிளோட்டப் போட்டியில் அவர்களும் பங்குபற்றினார்கள்.

## நடிகவேளின் புத்திரிக்கு 'இலங்கை' தெரியாதாம்!

விஜய் ரிவியின் பிரபல்யமான நிகழ்ச்சிகளில் ஒன்று 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி'.

நடிகர் சூர்யாவைத் தொடர்ந்து, பிரகாஷ்ராஜ் இப்போது இத்தொடரை அமர்க்களப்படுத்தி வருகிறார். அடிக்கடி திரையுலகப் பிரபலங்களை நிகழ்ச்சிக்குக் கொண்டு வருவது இவரது பாணி,

கடந்த மாதம் நடிகை ராதிகா அந்த 'வெப்பக் கதிரையில்' அமர்ந்து கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

அவரிடம், 'ரூபவாஹினி' தொலைக்காட்சி எந்த நாட்டில் ஒளிபரப்பாகிறது என்று கேட்கப்பட்டு, பதிலைத் தெரிவதற்கு வழங்கப்பட்ட நான்கு நாடுகளில் ஒன்று 'இலங்கை' என எழுதப்பட்டிருந்தது.

ஆனால் ராதிகா பதிலளிக்கையில் அழுத்தம் திருத்தமாக 'சிறீலங்கா' என்று பதிலளித்தார். சற்று ஏமாற்றமடைந்த பிரகாஷ்ராஜ் 'இலங்கை' என்று திருத்திச் சொன்னபோதும், ராதிகா மீண்டும் 'சிறீலங்கா' என்று அடித்துச் சொன்னார்.

இது, அவரது 'தாய்மொழி' விசுவாசம்.

## ஈழ காவியத்துக்குப் பதிலாக எமக்குக் கல்வெட்டு எழுதுக!

தமிழீழத்துக்குத் தேசிய கீதம் எழுதப்போவதாகவும், அங்கு நேரில் சென்று பார்த்து 'ஈழகாவியம்' எழுதப்போவதாகவும் இவர் முதன்முதல் கூறி பதினான்கு ஆண்டுகளாகிறது.

2002-2006 வரையான சமாதான ஒப்பந்த காலத்தில் தமிழக திரையுலகப் பிரபலங்கள் பலர் தமிழீழம் சென்று ஈழவிடுதலைப் போரை விளிக்கும் எத்தனையோ கலைப்படைப்புகளைத் தந்துவிட்டனர்.

ஆனால் இவர் மட்டும் அப்போது அங்கு போகவுமில்லை, அவ்வேளை ஈழகாவியம் பற்றி வாய் திறக்கவுமில்லை. ஈழம் எரிவதற்கு எண்ணெய் ஊற்றிக் கொடுத்த கலைஞர் கருணாநிதிக்கு இவர் கூஜாவாக இருந்ததை மறக்க முடியாது.

இப்போது புகலிடத் தமிழர்களிடம் தனது புத்தக வியாபாரத்தை நடத்த வருகையில் 'ஈழகாவியம்' என மீண்டும் பாடுகிறார்.

"கவிஞர் வைரமுத்து ஐயா அவர்களே! நீங்கள் ஈழகாவியம் எழுதியது போதும். ஈழத்தமிழரின் அழிவுக்கு உறுதுணையாக செயற்பட்ட உங்கள் தலைவருடன் சேர்ந்து எங்களுக்கு ஒரு கல்வெட்டுப் பாடுங்கள். மறந்து விடாதீர்கள்".

*குறிப்பு: பாரிஸிலிருந்து அங்கையன் என்னும் தமிழ் உணர்வாளர் எழுதிய மூன்று பக்க நீண்ட கட்டுரையின் சிறு பகுதி மட்டும் மேலே தரப்பட்டுள்ளது.*

## 'மல்லிகை' டொமினிக் ஜீவாவை கொலை செய்ய வேண்டாம்!

இலங்கையிலிருந்து கடந்த 48 வருடமாக வெளிவரும் 'மல்லிகை' சஞ்சிகையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா, 2006 அக்டோபர் 26ஆம் திகதி காலமாகி விட்டாராம்!

உலகப் புகழ்பெற்ற, பலரது நம்பிக்கையைப் பெற்ற 'விக்கிபீடியா' என்னும் இணையத்தளம் இப்படியாகப் பதிவு செய்து பலருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது.

1927 ஜுன் 27ல் பிறந்த ஜீவா, கடந்த மாதம் தமது 86வது பிறந்த நாளைக் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் கொண்டாடினார். இவர் கடந்த சில மாதங்களாகச் சுகவீனமாக இருப்பதால் 'மல்லிகை' வருகை தடைப்பட்டுள்ளது.

யார் என்னதான் சொன்னாலும் 'விக்கிபீடியா' இப்படியாக இமாலயத் தவறு விடக்கூடாது. ஒரு படைப்பாளியை உயிருடன் கொலை செய்வதா?

## பெண் பிரமுகர்களுக்கு கனடாவில் தட்டுப்பாடா?

தாயகத்திலிருந்து 2011ல் கனடா வந்து குடியேறிய முன்னாள் கல்வி அதிகாரி ஒருவர், கடந்த மாத தமிழர் தகவலின் இந்தப் பகுதியைப் படித்த பின்னர் எம்முடன் தொடர்பு கொண்டார்.

"இலக்கியக் கூட்டங்களைப் பற்றி எழுதுகிறீர்கள். இங்கு நடைபெறும் அரங்கேற்றங்களுக்குப் போவதில்லையா?" என்று மென்மையாகக் கேட்டார்.

"குறிப்பிட்ட சில ஆண்கள்தானே விருந்தினர்களாக வந்து ஒரே விடயத்தை அரங்கேற்ற மேடைகளில் திரும்பத் திரும்ப பேசுகிறார்கள்" என்று ஆரம்பித்து, "எதற்காக பெண் பிரமுகர்களை இவ்வைபவங்களில் விருந்தினர்களாக அழைப்பதில்லை? தட்டுப்பாடா?" என்று ஒரு போடு போட்டார்!

*பி.கு: இதற்கு நான் என்ன சொல்ல?*

## கோடி பெறுமதி மாளிகையின் சொந்தக்காரர் ஒரு பிச்சைக்காரர்

பிரிட்டனின் தலைநகரான லண்டனிலுள்ள Natwest வங்கிக் கிளையொன்றின் முன்னால் 37 வயதான ஒருவர் தினமும் பிச்சையெடுத்துக் கொண்டிருப்பார். சராசரியாக நாளொன்றுக்கு 300 பவுண்கள் இவருக்குக் கிடைக்குமாம்.

பிற்பகல் ஆறு மணியானவுடன் அங்கிருந்து புறப்பட்டு தமது இருப்பிடத்துக்குச் சென்றுவிடுவார்.

அந்த இருப்பிடம், Fulham High Streetல் அமைந்துள்ள அவருக்குச் சொந்தமான கோடி பெறுமதியான மாளிகை. மக்களுக்குப் பொய் கூறி பிச்சை எடுத்ததாக இவர் மீது வழக்குப் போட்டனர் பொலிசார். நீதிமன்றத் தீர்ப்பு: யாசகம் (பிச்சை எடுப்பது) பெறுவதற்கு சட்ட ரீதியான தடை!

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'குறமகள்' வள்ளிநாயகி இராமலிங்கம்

# மரண வாக்குமூலம்

மக்கள் தம் மரணம் நேரும்போது, தம்மால் ஆண்டு அனுபவித்த தம் சொத்துப் பத்துக்கள் காணி பூமி முதலியவற்றைத் தம் சொந்தபந்தங்களுக்கோ அன்புக்குரியவர்களுக்கோ சாசனம் பண்ணி வைப்பது மரண சாசனம் எனப்படும். இது சட்டபூர்வமாகச் செய்யப்படுவது. மரணசாசனம் செய்யப்படாவிடின் அவரது உரிமையாளருக்குத் தீர்க்கப்படும். அவனது சொந்தச் சம்பாத்தியமானால் மனைவிக்கு முழு உரிமையும் போகும்.

ஒரு காலத்தில் பெண்களுக்கு சீதனம் கொடுக்கப்பட்டால், ஒருவரின் மரணத்தின்பின் அவரின் சொத்துக்களுக்கு இப்பெண் உரித்துடையவர் அல்லர். ஆனால் தற்போது சீதனம் கொடுக்கப்பட்டாலும் மிகுதிச் சொத்துகளுக்கு அவரும் உரியவராவார்.

மரணசாசனம் எழுதப்படாவிட்டால், மரணப் படுக்கையில் சில பெரியவர்களைச் சாட்சியாக வைத்து மரண வாக்குமூலம் கொடுப்பதுண்டு. அதை நிறைவேற்றும் பொறுப்பை அப்பெரியவர் ஏற்றுக் கொள்வர். ஏதும் பகைமை இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என எதிர்மறை வாக்குமூலமும் கொடுப்பர்.

இத்தகைய வாக்குமூலங்கள் இன்று நேற்றல்ல மன்னராட்சிக் காலங்களிலும் நடைபெற்று வந்தது. இதற்கு இராமாயாணத்தில் ஒரு காட்சி உதாரணமாகிறது. அது கம்பர் வாயிலாக எமக்குக் கிடைக்கிறது. இராமர் வனவாசம் மேற்கொண்டபோது புத்திரசோகத்தால் வருந்தித் துடிதுடிக்கிறார் தசரத மன்னன். புத்திரசோகத்தால் உயிர் நீத்தார் என்பதை எந்தப் புத்தியுள்ள மனிதரும் நம்ப மாட்டார்.
சா விழாத வீடொன்றைக் கண்டுபிடிக்க முடியாத கதை ஒன்று புத்தர்பெருமானின் வரலாற்றோடு தொடர்புபட்டது. உலகநிலையில் பிறப்பும் இறப்பும் அவரவரால் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாக அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் கைகேயியை இரந்து கேட்கும் நிலை. அவளின் பெயரைக்கூட உச்சரிக்க மனமின்றி அவளுடைய ஸ்திரமான கோரிக்கையை ஏற்க மறுக்கும் தன் மனச்சாட்சியே அவனைக் கொல்லக் காரணமாக 'இரங்காதாளை' எனக் கம்பரே சொல்லுமளவுக்கு தசரதனின் கையறுநிலை. உயிர் அங்கோ இங்கோ என அல்லாடுகிறது. தனது மரணவாக்குமூலத்தைத் தன் குலகுருவாகிய வசிட்ட முனிவரை முன்னிறுத்திக் கூறுகிறார்.

"சொன்னேன் இன்றே இவளென் தாரம் அல்லள்
துறந்தேன்"
முதல்வரியில் பிரிவு மாத்திரம் (separation) கூறப்படுகிறது. 'துறந்தேன்' என்னும் வார்த்தையால் இருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச உரிமையும் இல்லை எனும் பொருள்பட (Divorce) விவாகரத்து கொடுக்கின்றார்.

ஒரு விடயத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமானால் அது வாக்கியத்தின் முதலில் வரும். எனவே பயனிலையாக வரவேண்டிய சொன்னேன் என்பது முதற் சொல்லாக வந்து இந்த வாக்குமூலம் அழுத்தம் திருத்தமானது என்பதாக்கும்.

மன்னனாக வர இருக்கும், அப்பரதன், என் மகனென்று ஏற்க மாட்டேன். பரதனையும் தன் மகன் ஏற்றுக் கொள்ளாமையை அப் பரதன் என படர்க்கைப் பொருளில் 'அப்' என்கிறார். ஆகையால் அவனும் என் மகன் எனும் உரிமைக்கு ஆக மாட்டான். மகன் என்ற முறையில் எந்த உரிமையும் அவனுக்குக் கிடைக்கக்கூடாது என்றமையால் பரதனுக்கு அரச உரிமை மாத்திரமல்ல கொள்ளி வைக்கும் உரிமையும் ஏற்கக்கூடாது எனும் கோபக் குமுறல் மரணவாக்குமூலமாக முனிவனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

மன்னராட்சிக் காலத்தில் இது சாத்தியமாகிறது. ஆனால் மக்களாட்சிக் காலத்தில் பிரதம மந்திரியாகட்டும் விடுதலைப் போராளிகளாகட்டும் அவர் தமது வாரிசு என ஒருவரையும் குறித்தோ குறிக்கப்பட்டோ நியமிக்க முடியாது. ஏனெனில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் அல்லவா.
பிரதம மந்திரி எவரெவர் அவ்வத்துறைகளுக்கு ஏற்றவர் எனக் கருதி ஒவ்வொரு துறைக்கும் மந்திரிகளை நியமிப்பார். அவர்கள் அததில் ஆய்வுகள் செய்து அவற்றில் பிரபலம் பெறுவர். ஏழு பேர் மந்திரிகளாயின் பிரதம மந்திரிக்கு ஏதாவது நடந்துவிட்டால் இந்த ஏழு மந்திரிகளும் பிரதம மந்திரியாகப் போட்டி போடுவர்.

சுதந்திரப் போராளிகளும் தலைவருக்கு விசுவாசமாக நடந்து வந்தவர்கள். தலைவர் யாரையும் வாய் திறந்து இவர்தான் எனக்கடுத்தவர் எனச் சொல்லாமையால் அவரது பிரதான தளபதிகள் தத்தமக்குள்ளேயே அந்தப் பொறுப்பை ஏற்க ஆவலாயிருப்பர். அது கிடைக்காவிட்டால் தாம் தாம் வெவ்வேறாகப் பிரிந்து சுதந்திரத்துக்காகப் போராடுவர். நடுவே இவர்களிடையே போட்டியும் பொறாமையும் தோன்றத் தம்முள் பகைமையை வளர்த்து பழைய ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பர். இதுதான் மக்களாட்சி எனும் பெயரால் மக்களைச் சின்னாபின்னம் ஆக்குகின்றது.
எனவே மரண வாக்குமூலம் என்பது செயலற்று விடுகிறது.

இன்னே யாவும் பகர்வான்
இரங்காதாளை நோக்கி
சொன்னேன் இன்றே இவள் என்
தாரம் அல்லள் துறந்தேன்
மன்னே ஆவான் வரும் அப்
பரதன் தனையும் மகன் என்று
உன்னேன் முனிவா அவனும்
ஆகான் உரிமைக்கு என்றான்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# யானையும் நரியும்!

பொழுது சாயத் தொடங்கி விட்டது. களத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கேட்டுக் கொண்டிருந்த வாட்கள் மோதும் ஓசையும் முற்றாக அடங்கி விட்டது. ஆம்! அன்றைய நாள் போர் முடிந்து விட்டது. இனிக் காலையிலே தான் போர் தொடங்கும். வானிலே கழுகுகள் வட்டமிடுகின்றன அறுபட்ட அங்கங்களைத் தூக்கிப் போக!

குதிரைகளின் குளம்பொலிக்கும் யானைகளின் பிளிறலுக்கும் அஞ்சித் தூரத்தே அலைந்த நரிகள் கூட்டம் பயந்தெளிந்து களம் புகுந்து ஆறாக ஓடும் இரத்தத்தை சுவைத்து மகிழ்கின்ற இரவும் வந்தது! போர் புரிந்த வீரர்களும் போரிலே புண் அடைந்த விலங்குகளுக்கு மருந்து இடுவோரும் கூட உறங்கி விட்டார்கள் நாளை போராட!

பகை உணர்ந்து தாக்காமல் பகல் போல ஒளி கொடுத்த அகல் விளக்குக் கூட்டங்கள் அவையும் அணைந்து விட எங்கும் புகை இருட்டு! புரவி உறங்க புல் நுனியில் வேல் உறங்க பரவிக் கிடக்கின்ற பாயெல்லாம் வில்லுறங்க அரவும் கழுத்து மணி அவையும் உறங்குமொரு இரவுப் போதினிலே! இருளோடு இருளாக நின்ற அந்த யானையின் காவலர்களும் உறங்கி விட்டார்கள்! களத்திலே தலைமை தாங்கி நின்று வேல் கொண்டு தாக்க வந்த எத்தனையோ வீரர்களை அஞ்சாது தனது தந்தங்களினாலே குத்திக் கோர்த்தெடுத்த வீரம் மிக்க யானை மெதுவாக அசைந்து நடந்தது! அது தனிமைக்கு அஞ்சவில்லை! தொடர்ந்து நடந்தது!

இருளில்! குளிர் காற்று வீசியது முதலில்! நீரோடும் கடற்கரைக்கு வந்து விட்டது அது! திடீரென்று நீர் நனைத்தது கால்களை! முதலில் அதன் முன் கால்கள் குளிர்ந்தன இருளில்! நிலைமையைப் புரிந்து கொள்வதற்குள்ளாக முன்கால்கள் முற்றாகப் புதைந்து விட்டன சேற்றில்! அவற்றை எடுப்பதற்காக வைத்த பின்கால்களும் அப்படியே! தனது நிலையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட யானை தப்ப முயன்று திரும்பிப் பார்த்தது! எதுவும் தெரியவில்லை!

அப்போது தான் சில சருகுகள் அசையும் சத்தம்! எரியும் தணல் போன்ற கண்களுடன் நாற்புறமும் நரிகள்! வீரம் விலை போகா இடம்! பலம் பயன் தராத சூழ்நிலை! விவேகமற்ற செயலால் வாழ்க்கையே வீணாகும் தருணம்! இப்போது துணை வேண்டும்! துணைக்குத் தூது வேண்டும்! தூதைத் துதிக்க வெண்டும்! துதித்தால் மானம் அழியும்! மானம் அழிவதால் தள்ளிப் போகும் சாவா? அல்லது மானம் அழியாமல் சாவை ஏற்றுக் கொள்ளுவதா? எதிரிகள் பலம் அற்றவர்கள் தான்! ஆனால் அவர்களைச் சந்தித்த இடம் தவறானது! அதனால் தோல்வியும் மரணமும் கைகோர்த்து வருகின்றன! ஏற்றுக் கொள்ள வேண்டியது தான்! அது யாருக்கும் குரல் கொடுக்கவில்லை உதவிக்கு!

பொழுது விடிந்தது! காவலர்கள் கதறினார்கள்! படைகள் பதைத்தன! மக்கள் புலம்பினார்கள்! நம்ப முடியாமல்! சதுப்பு நிலத்திலே சாய்ந்து கிடந்தது மாபெரும் வீரம் நரிகள் கடித்த காயத்தோடு!
வள்ளுவர் எழுதினார்!

கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேல்ஆள் முகத்த களிறு

கண்அஞ்சா வேலாள் - எதற்கும் பயப்படாமல் வேலோடு தாக்க வரும் பகைவர்களை: முகத்த களிறு – தந்தத்தினாலே குத்திக் கோர்த்தெடுத்த வீரம் மிக்க யானையானது: கால்ஆழ் களரின் - கால் புதைகின்ற சேற்று நிலத்திலே போனால்: நரிஅடும் - நரிகளால் கொல்லப்படும்!
எதற்கும் பயப்படாமல் வேலோடு தாக்க வரும் பகைவர்களை தந்தத்தினாலே குத்திக் கோர்த்தெடுத்த வீரம் மிக்க யானையானது கால் புதைகின்ற சேற்று நிலத்திலே போனால் நரிகளால் கொல்லப்படும்!

எந்தப் பெரிய வீரனாக இருந்தாலும்சரி பிழையான இடம் ஒன்றிலே எதிரிகளிடம் சிக்கிக் கொண்டால் அழிவைச் சந்தித்துத் தான் ஆகவேண்டும் என்பது திருக்குறள் விடுக்கும் எச்சரிக்கை ஆகும்!
திருக் குறளிலே இந்த அறிவு பூர்வமான செய்தி இடன் அறிதல் என்ற அதிகாரத்தில் சொல்லப்படுகின்றது. இடன் அறிதல் காலம் அறிதல் வலி அறிதல் என்ற மூன்று அதிகாரங்களும் தமிழனின் போர்த் தந்திரங்களுக்கு எடுத்துக் காட்டான திருக்குறள் செய்திகள் ஆகும்!

விலங்குகளையும் பறவைகளையும் நடை முறையில் உதாரணம் காட்டி மிகவும் எளிமையாக அந்த மனிதர் சொன்ன செய்திகளை என்னவென்று உணராமல் அறம் பொருள் இன்பம் என்று கூறு கட்டி மூன்று பைகளில் போட்டுச் சுமக்கின்றது இன்றைய தமிழ் உலகம்!

எத்தனை புத்தகங்களைப் படித்தாலும் மனுசருக்கு பிறவிக் குணம் தான் வரும் என்பதை நுண்ணிய நூல் பல கற்பினும் மாந்தர்க்கு உண்மை அறிவே மிகும் என்றும் மனத்திலே இருந்து வருவது போல தெரிந்தாலும் மனுசருக்கு பிறந்த இனத்தின் அறிவு தான் இருக்கும் என்பதை மனத்து உள்ளது போலக் காட்டி மாந்தர்க்கு இனத்து உள்ளதாகும் அறிவு என்றும் வெளிப்படையாக சொல்லிவிட்டுப் போனவரல்லவா திருவள்ளுவர்?●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன்

தமிழ் சினிமாவும் முகப்புத்தகத்தூடாக தன் பிரபலப்படுத்தலை அதிகரித்து வருகிறது. இன்று தமிழக தமிழ் சினிமாச் செய்திகள் மட்டுமே கொண்ட முகப்புத்தகப் பக்கங்கள் பல இருக்கின்றன. பல தமிழ் நடிகர்கள் தங்களுக்கான சொந்த முகப்புத்தகத்தை வைத்திருக்கிறார்கள். ரசிகர் மன்றங்கள் முகப்புத்தகத்தில் உண்டு. நடிக நடிகையர் சம்பந்தப்பட்ட கிசுகிசுக்கள், நடிகைகளின் சற்றே ஏடாகூடமான புகைப்படங்கள் என மஞ்சள் பத்திரிகைகளுக்கு நிகரான பக்கங்களும்கூட இருக்கின்றன. பல படங்கள் முகப்புத்தகத்தின் வழியே விமர்சனங்கள் பகிரப்பட்டு பாராட்டப்பட்ட காரணத்தால் வெற்றிப் படங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு விஸ்வரூபம் போன்ற பெரிய திரைப்படங்களின் பெரிய வெற்றிக்கு மட்டுமல்லாது 'நடுவில கொஞ்சம் பக்கத்தை காணோம்", 'பீட்ஸா", 'சூது கவ்வும்" போன்ற சிறிய படங்களின் மாபெரும் வெற்றிக்கு முகப்புத்தக உலகின் பங்களிப்பும் ஒரு காரணம் என்று தைரியமாகச் சொல்லலாம்.

இவற்றிற்கிடையே 'வேறொருவகை' சினிமாவுக்கும் இன்று முகப்புத்தகம் உபயோகமாகி வருகிறது. அதுதான் ஈழத் தமிழ் மக்களின் சினிமா!! சென்ற மாதம் பலரது முகப்புத்தகங்கள் புலம்பெயர் ஈழத்தமிழர் சினிமாக்களைப் பிரபலப்படுத்தியதைக் கண்டேன்.

புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத்தமிழ்ப் படங்கள் சோதனை முறையில்தான் எடுக்கப்படுகின்றன. தயாரிப்புக்கு மட்டுமல்ல விளம்பரங்களுக்கும் அதிக பணம் செலவு செய்ய முடியாத நிலையில்தான் நம் புலம்பெயர் ஈழத்தமிழ் சினிமாப்படத் தயாரிப்பாளர்கள் எப்போதும் இருக்கிறார்கள். அதனால்தானோ என்னவோ இப்போதெல்லாம் புலம்பெயர் ஈழத்தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பலரும் தம் விளம்பரங்களுக்கு தொலைக்காட்சிகளையோ, பத்திரிகைகளையோ நம்புவதைவிட முகப்புத்தகத்தையே பெரிதும் நம்பியிருக்கின்றனர். திரையீட்டு திகதியை முகப்புத்தகத்தில் ஒரு 'எவன்ட்' ஆக உருவாக்குவது, பல்வேறு முறைகளில் தம் படைப்புக்களைச் சிறப்பாகப் பிரபலப்படுத்துவது என 'விளம்பரத்தில்' கலக்குகிறார்கள். ஓரிருவர் ஒரு படி மேலேபோய் படைப்புக்களுக்கு 'ஆதரவு தாருங்கள்" என்ற வேண்டுகோளை தனிப்பட்ட மெஸேஜ் ஊடாகவும் தருகிறார்கள்.

என்னதான் பிரபலப்படுத்தினாலும் ஆதரவு கேட்டுக் கெஞ்சினாலும், பல புலம்பெயர் ஈழத்தமிழ் சினிமாக்கள் ஒரு நல்ல திரைப்படத்திற்கு உரிய குறைந்த பட்சத் தரமில்லாமல்தான் இன்னமும் எடுக்கப்படுகின்றன என்பது என் தனிப்பட்ட கருத்து. அதனால்தான் புலம்பெயர் ஈழத்தமிழ் சினிமா பற்றி முகப்புத்தகத்தில் ஒருமுறை விவாதம் உருவானபோது பின்வருமாறு எழுதியிருந்தேன்: *'எங்கட ஈழத்தமிழ் சினிமாத்தயாரிப்பாளர்களும்சரி, இயக்குனர்களும்சரி தங்கடபாட்டில ஒரு படம் எடுப்பினம்... அதன் தரம் பற்றி அவர்களே அதீத மதிப்பீடு கொண்டும் இருப்பார்கள்... பிறகு திரையிட்டுப் பார்ப்பார்கள்.. பண நட்டம் ஏற்படும். பிறகு "மக்கள் தங்களை ஆதரிக்கவில்லை"... "மீடியா தங்களை ஆதரிக்கவில்லை"... "விமர்சகர்கள் தங்களை ஆதரிக்கவில்லை..." என்றெல்லாம் அழுது புலம்புவார்கள்... இதுதான் பலருடைய ஈழத்தமிழ் திரைக் கதை.! ஒரு படத்தை எடுப்பது மட்டும் சினிமா ஆகிவிடாது என்பதை பலரும் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை.."*

அதற்கு ஜேர்மனியில் இருந்து என் முகப்புத்தக நண்பரும் திரைப்பட இயக்குனருமான ஒருவர் இப்படி பதிலளித்திருந்தார்: *"இலங்கையில் சில முதலாளிகளின் கைகளில் சிக்கி ஈழத்தமிழ் சினிமா தடுக்கப்பட்டது. இரண்டாவதாக ஒரு அரசியல் அலைக்குள் சிக்கி புலத்திலும் வளராமல் போனது. அதற்கு மேலாக சிந்திக்க, அல்லது படைக்க யாராலும் முடியவில்லை. மீறினால் முளையிலேயே தடுப்பது சிலரது கடமையாயிற்று. இவற்றை மீறி எதையாவது செய்ய இளையோரால் முடியும்தான். ஆனால் அவை வெளிவரவும் தடைகள் அதிகம் தற்போதைக்கு உண்டு."*

என்னால் அவரது இந்த அவதானிப்பை முற்று முழுதாக ஒத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு படம் நன்றாக இருந்தால் அது மக்கள் ஆதரவை பெறுவதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் விளம்பரங்களும், பப்ளிசிட்டித் தந்திரங்களும், 'ஆதரவு தாருங்கோ' என்ற கெஞ்சல்களும் ரசிகர்களை ஒருமுறைதான் ஒரு படத்தைப் பார்க்க வைக்குமே தவிர 'நல்ல படம்' என்று சொல்ல வைக்காது. ('நல்ல படம் என்றால் என்ன?' என்ற கேள்வி இந்த இடத்தில் எழலாம். எந்தப் படம் ஒருமுறை படத்தைப் பார்த்தவரை, அப்படத்தை மீண்டும் திரும்பவும் பார்க்க வைக்குமோ அதுதான் 'நல்ல' படம்! கலைத்துவம், தொழில்நுட்பம் எல்லாம் அதற்குப் பிறகுதான் என்று 'ரசிக நிலை'ப்பட்டு இப்போதைக்கு வைத்துக் கொள்வோம்.)

வேடிக்கை என்னவென்றால் புலம்பெயர் ஈழத்தமிழ் சினிமாப் படைப்பாளிகள் பலரும் ரசிக நிலைப்பட்ட விமர்சனங்களை பெரும்பாலும் ஒத்துக் கொள்வதில்லை. ஓரிருவர் *'தமிழகப் படங்களோடு எங்களுடையதை ஒப்பிடாதையுங்கோ"* என்று உணர்ச்சிவசப்படுகிறார்கள். (நான் அறிந்த அளவில் அப்படி ஒப்பிடும் அளவிற்கு முட்டாள் ரசிகர்கள் இப்போது இல்லை.) இன்னும் சிலர் *'இப்பதான் முதல் முறையா படம் எடுக்கிறம்.. இதில சில பிழையள் வரும்தான்.. அடுத்த முறை இன்னும் நல்லாச் செய்வோம்"* என்று சொல்லிப் பாவமன்னிப்பு கேட்பவர்களாகவும் இருக்கிறார்கள். அடபோங்கப்பா... இப்ப பெத்த பிள்ளையைப் பற்றித்தான் பேச்சே தவிர அடுத்தமுறை ஒத்துக் கொள்வதை பற்றி அல்ல.. சரி... அப்போ என்னதான் செய்வது?

தீர்வு மிகச் சுலபமானது. ஈழத்தமிழ் படைப்பு என்று படம் எடுப்பவர்கள் படைப்புக்களை வெளியிடுமுன் அவற்றிற்கு ஒரு முறையாவது தரக்கட்டுப்பாட்டுச் சோதனை ஒன்றை வைத்துக் கொள்ள வேண்டியது மிக மிக மிக அவசியம். படத்தின் தரத்தை வெளியீட்டுக்கு முன் நிர்ணயிக்க இது உதவும். ரசிக நிலையில் பிரச்சனை இருப்பது தெரிந்தால் படத்தை திருப்பி எடிட் பண்ண வேண்டும். அல்லது ரீஷூட் பண்ணவேண்டும். (இதனால் பணச்செலவு இன்னும் ஏற்படக்கூடும். ஆனால் தரம் உயரும். அதுதானே நமக்குத் தேவை!)

செழித்திருக்கும் தமிழக சினிமாவோடு ஒப்பிட்டால் புலம்பெயர் ஈழத்தமிழ் சினிமாவுலகு ஏழையாகத்தான் இருக்கிறது. அதற்காக 'ஒருக்கா வந்து எங்கட படத்தைப் பாருங்கோ.. ஆதரவு தாருங்கோ" என்று யாரும் எங்கும் - முகப்புத்தகத்தில் உட்பட - ரசிகர்களிடம் கெஞ்சக் கூடாது.

பிச்சைக்காரனாக இருக்கலாம்... ஆனால் பிச்சை எடுக்கக்கூடாது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# குடியுரிமை பெற்ற எல்லோரும் கனடியரா?

யூலை மாதம் கனடியர்களுக்கு மிக முக்கியமான ஒரு மாதம். 1867ல் வட-பனிப்புலத்தில் பிரித்தானிய காலனிகளாக இருந்த மூன்று பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, பிரித்தானிய வடஅமெரிக்கச் சரத்து உருவாக்கப்பட்ட யூலை முதலாம் திகதி, கனடிய நாடு தனது எல்லைக்குள் ஒன்றிணைக்கப்பட்ட ஒற்றைப் பிரதேசமாக உருவாக்கம் பெற்றது.

டொமினியன் தினம் என்ற பதம், பின்னர் கனடா தினமாக மாற்றம் பெற்று, வருடாவருடம் கனடிய பாரம்பரிய நிகழ்வுகளோடு இணைந்ததாக அனைத்து மாகாணங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அளவுக்கு அதிகமான குளிரும் பனியும் சீரற்ற காலநிலையும் காணப்படுவதால், வசதியுள்ள பலரும், சீரான காலநிலை உள்ள நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்வது கனடாவைப் பொறுத்தவரை சாதாரண விடயம். குழந்தை பெற்றுக்கொள்ளும் விடயத்தில், கனடியர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. விரும்பும்வரை ஒன்றாய் வாழலாம், காலப்போக்கில் திருமணம் பற்றி சிந்திக்கலாம், நன்றாக ஒத்துப்போனால் மட்டும் குழந்தை பற்றி, அதுவும் ஒரேயொரு குழந்தை பெற்றுக்கொள்வது பற்றி, பேசித் தீர்மானிக்கலாம் என்பதே நடைமுறைப் பண்பாகக் காணப்படுகிறது. இந்த விழுக்காட்டை நிவர்த்தி செய்து, கனடிய வளங்களையும் அடிப்படைத் தேவைகளையும் தொடர்ந்தும் பேண, மனித எண்ணிக்கை தேவைப்படுகிறது.

வேறு எந்தக் காரணத்தையும் காட்டி தக்க வைத்துக்கொள்ள முடியாத மனித வளத்தை, இரண்டு பிரதான காரணங்களைக் காட்டி கனடாவிற்கு அழைத்துக் கொள்ளவும் தக்க வைக்கவும் முடிகிறது. ஒன்று பொருளாதாரக் காரணம். பொருளாதார ரீதியாக வளர்ச்சி குன்றிய நாடுகளிலுள்ளவர்கள், தங்கள் நிலைமையை முன்னேற்றும் நோக்குடன் வர விரும்புகிறார்கள் என்பதால், அதற்கு அனுமதி கொடுத்து, மனித வளத்தை அதிகரிக்கிறார்கள். ஆனால் இதில் காணப்படும் சிக்கல் என்னவென்றால், பொருளாதார வளமற்றவர்களில், கனடாவிற்கு வர விரும்பும் அனைவரும் தங்கள் பயணத்திற்கான அடிப்படைப் பணத்தேவையை அவ்வளவு இலகுவில் தயார் செய்துகொள்ள முடிவதில்லை.

இதற்காகவே கண்டுபிடிக்கப்பட்ட இன்னுமொரு வழிதான், இரண்டாவது காரணமாகக் காணப்படுகிறது. பல்வேறு நாடுகளிலும் இடம்பெறும் யுத்தம், அழிவு, இனப்பிரச்சனை, இனஅழிப்பு, சிறுபான்மையை நசுக்கும் பெரும்பான்மை, அராஜக ஆட்சி, இராணுவ கொடுங்கோல் ஆட்சி, கம்யூனிச கடும்போக்கு, இன மத மொழி ரீதியான படுகொலைகள் போன்ற பல்வேறு சூழ்நிலைகளாலும் பாதிக்கப்படும் மக்களுக்கு, தற்காலிக அகதி அந்தஸ்தை வழங்கி, மனித வளத்தை உள்வாங்கிக் கொள்வது இந்த யுக்தியாகக் காணப்படுகிறது.

ஈழத்தில் பல ஆண்டுகளாக சிங்களப் பெரும்பான்மை கொடுங்கோல் ஆட்சியாளர்களால் நசுக்கப்பட்டு, ஊரையும் மண்ணையும் உறவுகளையும் வாழ்வாதாரத்தையும் கல்வி-கலை-கலாசாரம்-பண்பாட்டையும் இழந்து, சொந்த நாட்டில் அகதிகளாக துவம்சம் செய்யப்படும் தமிழ் இனத்திற்கும், கனடிய நாடு தனது சட்டங்களைத் தளர்த்திக்கொண்டு, தாராளக் கொள்கையோடு அகதி அந்தஸ்தை அதிகரித்த அளவில் வழங்கி, பல ஆயிரக்கணக்கில் அவர்களை உள்வாங்கிக் கொண்டது. புலம்பெயர்ந்து இந்நாட்டிற்குள் வரும் அகதிகளுக்கு அவசிய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்தில், எதிர்காலத்தில் அவர்களது சந்ததியினர், நிரந்தர கனடிய குடிமக்களாக, கனடாவின் வளங்களைத் தக்கவைக்க உதவுவார்கள் என்ற கனடாவின் கணிப்பு வீண்போகவில்லை. குறிப்பாக, ஈழத்தமிழர்கள் இந்த விடயத்தில் இரட்டிப்புப் பலனை கனடிய நாட்டிற்கு வழங்கி, தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் கல்வியிலும், பொருளாதாரத்திலும், ஏனைய பல துறைகளிலும் மிகக் கடுமையான உழைப்பும் உத்வேகமும் கொண்டவர்களாக உருவாக்கியதுடன், கண்ணியமான வாழ்வியலும், ஒழுங்கமைக்கப்பட்ட குடும்ப வாழ்வும், கல்வியில் துறைசார் வெற்றியும் கொண்டவர்களாக வளர்த்தெடுத்து, தாம் பிறந்த தமிழ்ஈழ தேசத்திற்கும், வந்து குடியேறிய கனடியத் திருநாட்டிற்கும் புகழ்சேர்த்து வருகிறார்கள்.

கனடா தேசம், ஈழத் தமிழ் மக்களுக்கு நீட்டிய நேசக்கரமும், கனடிய மக்கள் ஈழத்தமிழ் மக்களின் அப்போதைய நிலைமையை உணர்ந்துகொண்டு புரிதலுள்ள, தாராள மனப்பான்மையுள்ள, ஏற்றுக்கொள்ளும் பண்புள்ள நல்ல மானிடப்பண்பும் மனித மாண்பும் தெரிந்த அற்புத பிறவிகளாக இருந்ததால், எமது தவறுகளையும் குறைகளையும் புரியாத பழக்கவழக்கங்களையும் ஏற்கக் கடினமான எமது அன்றாட நடைமுறைகளையும், எமது சமய கலாசார முறைமைகளையும் அனுசரித்து அல்லது கண்டுகொள்ளாமல் பொறுத்துக்கொண்டு, எம்மை உள்வாங்கிக் கொண்டார்கள்.

நாம் தற்போது கனடிய மக்கள். இப்போது நாமும் அவர்களைப் போன்று வாழ்வதற்கு எம்மைப் பழக்கிக் கொள்வது அவசியம். புதிதாக வருகின்ற அகதிகளைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம், நாம் அகதிகளாக வந்தபோது எம்மை ஏற்று வாழவைத்த கனடியர்களுக்கும் கனடாவிற்கும் நன்றியாக இருப்பதற்கு முயற்சிக்கும் மனப்பக்குவம் போன்றவற்றை நாம் வளர்த்துக் கொள்வது அவசியம். ஊண்-உடை-உறைவிடம் தந்து, கட்டுப்பாடு எதுவுமின்றி, வானமே எல்லை – வாழ்ந்து வெற்றி பெறுங்கள் என்று எமக்கு உற்சாகம் தந்த கனடியப் பெருநாட்டிற்கு நாம் நிறையவே கடமைப் பட்டிருக்கிறோம் - அதற்கு நன்றியாக இருப்போம். எமது தொழில் இடங்களில், எமது பாடசாலைகளில், எமது சந்திப்புக்களில் கனடிய மக்களுக்கும் நாம் திரும்பக் கொடுக்கவேண்டிய கடமை எமக்கு இருக்கிறது. கனடாவிற்கும் கனடிய மக்களுக்கும் நாம் ஏதாவது ஒரு வகையில் நன்றியைத் திரும்பக் கொடுக்கும் வாய்ப்பு வந்தால், மகிழ்வுடன் அதை ஏற்றுக்கொண்டு, வாய்ப்பைப் பயன்படுத்தி அதில் மகிழ்ச்சியடைவோம். எமது நிறுவனத்தில் கனடியருக்கும் வாய்ப்பு, எனக்குக் கீழே தொழில் புரிவோர் வரிசையில் கனடியருக்கும் வாய்ப்பு, அன்பும் நன்றியும் பாராட்டுவதில் கனடியர்கள் எமக்குக் கற்றுத்தந்த பண்பை நாமும் பயன்படுத்தி கனடாவைப் பெருமைப் படுத்துவோம்.

கனடிய குடியுரிமை மட்டுமே எம்மைக் கனடியர்கள் ஆக்கிவிடாது, கனடிய நாட்டின் பண்பும் நாகரிகமும் பண்பாடும் எம்மிலும் வரும்வரை, நாம் கனடியர்கள் ஆகிவிட முடியாது. நேரக்கட்டுப்பாட்டை அவசியம் பழகிக் கொள்வோம். தேவைப்படும் வேளைகளில், நன்றி கூறுவது, பாராட்டுவது, பெருமைப் படுத்துவது உட்பட, அவ்வப்போது அடுத்தவர் குறைகளைப் பொறுத்துக்கொண்டு, புரிதலும் அனுசரித்துப்போகும் பண்பும் கொண்டவர்களாக வாழ முயற்சிப்போம். கனடாவில் காணப்படும் நல்ல பண்புகளை, எம்மிலும் வளர்த்துக்கொண்டு, நல்ல கனடிய குடிமக்களாக மாறி, கனடாவிற்குப் பெருமை சேர்ப்பதே, நாம் காட்டும் நன்றியாக அமையும்.

அனைவருக்கும் கனடாதின நல்வாழ்த்துக்கள்.●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழ் இலக்கியத் தோட்ட விருது விழா











கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா வழமைபோல ரொறன்ரோவில் யூன் 15ம் தேதி ராடிஸன் ஹொட்டலில் நடைபெற்றது. இம்முறை வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல் விருது நாஞ்சில் நாடன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. நவீனத் தமிழின் முக்கிய அடையாளங்களில் ஒருவராகத் திகழும் இவர் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் என பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கியவர். இயல் விருதை தொடர்ந்து மற்றைய விருதுகளும் வழங்கப்பட்டன: புனைவு இலக்கியப் பிரிவில் 'அஞ்சலை' நாவலுக்காக கண்மணி குணசேகரனுக்கும், அபுனைவு இலக்கியப் பிரிவில் 'தாழப் பறக்காத பரத்தையர் கொடி' நூலுக்காக பிரபஞ்சனுக்கும், 'வன்னி யுத்தம்' நூலுக்காக நூலின் ஆசிரியர் அப்புவிற்கும் விருதுகள் வழங்கப்பட்டன. கவிதைப் பிரிவில் 'இருள் தின்ற ஈழம்' தொகுப்புக்காக தேவ அபிராவுக்கும், 'யுகபுராணம்' தொகுப்புக்காக நிலாந்தனுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மொழிபெயர்ப்பு பிரிவில் 'அசடன்' மொழிபெயர்ப்புக்காக (ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு) எம்.ஏ. சுசீலாவுக்கும், முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை சங்க நூல்கள் மொழிபெயர்ப்புக்கு (தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு) வைதேகி ஹேர்பர்ட்டுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவர் கட்டுரைப் போட்டியில் மீரா ரகுநாதன் பரிசு பெற்றார். தமிழ் இலக்கியத் தோட்டத்தின் சிறப்பு விருது ஆசீர்வாதம் தம்பதியினருக்கு வழங்கப்பட்டது. சுந்தர ராமசாமி நினைவாக நிறுவப்பட்ட 'கணிமை விருது' முகுந்தராஜ் சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.●

# தலைமைத்துவ-தன்னார்வ போட்டியில் வெற்றியீட்டிய மூவரும் தமிழ் மாணவர்

ஸ்காபரோ 42ம் பிரிவு காவற்துறையினரும், ஸ்காபரோ சீனச் சமூகமும் இணைந்து இங்குள்ள பலவினச் சமூக பாடசாலை மாணவர்களிடையே தலைமைத்துவ மற்றும் தன்னார்வப் பணிக்கான போட்டியொன்றை நடத்தினர். இதன் மூன்று பரிசுகளையும் வென்று சாதனை படைத்துள்ளனர் மூன்று தமிழ் மாணவர்கள். ஸ்டீபன் லீகொக் பாட-சாலை மாணவிகளான கௌரிக்கா சிதம்பரநாதன் (தரம் 9), கோபிக்கா சிதம்பரநாதன் (தரம் 10) ஆகிய சகோதரிகளும், மற்றும் தரம் 12ல் கல்வி பயிலும் அரவிந் ராமராயு ஆகிய மூவருமே வெற்றி மாணவர்கள். இவர்களுக்கான பரிசுகள் வழங்கும் வைபவம் கடந்த மாதம் மூன்றாம் திகதி ஸ்காபரோ சீன கலாசார மண்டபத்தில் நடைபெற்றவேளை மாகாண சபை உறுப்பினர், நகர சபை உறுப்பினர்கள் என்று பல பிரமுகர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.●










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் கிரிக்கெட் போட்டியில் தமிழரின் புலிக்கொடி ஆர்ப்பாட்டம்



கடந்த மாதம் லண்டன் கார்டிஃப் மைதானத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற சாம்பியன் கிரிக்கெட் போட்டியில், இலங்கையின் மனித உரிமை மீறல்களைச் சித்தரிக்கும் வகையிலான புலிக்கொடி ஆர்ப்பட்டத்தை அங்கு வாழும் தமிழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். பெருமளவு தமிழர்கள் பங்கேற்ற இந்நிகழ்வு உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி ஊடகங்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இந்தப் போட்டியில் இலங்கை அணி இந்திய அணியிடம் தோல்வியடைந்தது. புலிக்கொடி ஆர்ப்பாட்டத்தின் சில ஒளிப்படங்கள் இங்கே.

# மொன்றியலில் இரண்டு நூல்களின் அறிமுக விழா











தெல்லிப்பளை மகாஜன கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதியின் 'எம்மை வாழ வைத்தவர்கள்' மற்றும் 'மரம் மாந்தர் மிருகம்' ஆகிய இரு நூல்களுக்கான அறிமுகவிழா அண்மையில் மொன்றியல் அருள்மிகு திருமுருகன் ஆலய மண்டபத்தில், விழாவை ஏற்பாடு செய்தவரான 'வீணைமைந்தன்' சண்முகராஜா தலைமையில் நடைபெற்றது.
திரு. ந. வாகீசன் வரவேற்புரையும், சிவாச்சாரியார் ஆ. வெங்கடேஸ்வரக் குருக்கள் ஆசியுரையும், திரு. நாக. கணபதிப்பிள்ளை மற்றும் ஆசிரியர் மு. சிவானந்தன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கினர். எழுத்தாளர் க. நவம் 'எம்மை வாழ வைத்தவர்கள்' நூலுக்கு வழங்கிய அறிமுகவுரையைத் தொடர்ந்து, திரு. பா. கருணானந்தன் இரு நூல்களையும் ஆய்வு செய்தார். நூலாசிரியரின் ஏற்புரை இறுதியாக இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட மண்ணில் தமிழ் மெல்ல மெல்ல வளர்கிறது!



## அனைத்துலக தமிழ் மொழித் தேர்வில் 40,000 சிறாரின் தாய்மொழி ஆர்வம்!



கடந்த மாதத்தின் ஒரு நாள் உலகம் முழுவதும் தமிழ் மணம் வீசியது. அதனைச் செய்தவர்கள் புகலிட மண்ணில் வாழும் தமிழ்ச் சிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்களும் மண்ணை விட்டு வேரோடு கிளப்பப்பட்டவர்களுக்கு புகலிடத்தில் பிறந்தவர்கள்.

வாராவாரம் தங்கள் தங்கள் நாட்டில் நடைபெறும் தமிழ் வகுப்புகளுக்கு விருப்புடன் சென்று தமிழைப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் கற்றுக் கொண்ட இந்தச் சிறார்கள் வருடாந்தத் தேர்வுக்காக அந்த ஒரு நாள் தங்கள் தங்கள் நிலையங்களில் ஒரே நேரத்தில் கூடினர்.





நேர்த்தியாகவும் அழகாகவும் அமைக்கப்பட்ட தேர்வு மண்டபத்தில். சீருடையில் காத்திருந்த ஆசிரியர்களின் மேற்பார்வையில் இவர்கள் தங்கள் திறமையைப் பரீட்சிக்க ஒன்றாகிச் செயற்பட்டனர். இதிலுள்ள சிறப்பு அம்சம் என்னவெனில், இவர்களின் பெற்றோர் தேர்வு மண்டபங்களுக்கு வெளியே ஆவலுடன் காத்திருந்த அழகு. இது பலருக்கும் அவர்களின் தாயக பாடசாலை வாழ்காலத்தை நிச்சயம் நினைவூட்டியிருக்கும். ஐரோப்பாவின் சில நாடுகளில் இடம்பெற்ற தேர்வின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கையூர் ஜெகனின் நூல்கள் வெளியீட்டு விழா











நன்கறிந்த பிரபல எழுத்தாளர் சங்கையூர் ஜெகனின் நூல்களின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 15ஆம் திகதி கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் திரு. சாமி அப்பாத்துரை தலைமையில் நடைபெற்றது. சட்டவாளர் தம்பையா சிறிபதி மற்றும் உதயகரன் துரைராஜா ஆகியோரின் வாழ்த்துரைகளைத் தொடர்ந்து எழுத்தாளர் க. நவம் சிறுகதைத் தொகுப்புக்கான ஆய்வை நிகழ்த்தினர். மார்க்கம் நகர-சபை உறுப்பினர் லோகன் கணபதி சிறப்புரையாற்றினார். இவ்வைபவம் சிறப்பாக நடைபெற உதவியமைக்காக எஸ் ரி. சிங்கம் மதிப்பளிப்புச் செய்யப்பட்டார். நூலாசிரியர் சங்கையூர் ஜெகன் ஏற்புரை நிகழ்த்தினார்.●





ஜேர்மன் வீதிகளில் ஆங்காங்கு தமிழ்ப் பெயர்ப் பலகையைக் கொண்ட பேருந்துகள் ஓடுகின்றன. அங்கு நீண்ட காலமாக வசிக்கும் ஓர் அன்பர் ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியில், தமிழில் சேருமிடம் எழுதப்பட்ட பேருந்தைப் பார்ப்பதைத் தமது கமராவில் பதிவு செய்த இன்னொரு தமிழ் அன்பர் மின்னஞ்சலில் அனுப்பிவைத்த ஒளிப்படம் இது.●

# கனடிய கலை-இலக்கிய பிரமுகருக்கு ஈழமண்ணில் பாராட்டும் மதிப்பளிப்பும்



கனடாவில் கலை-இலக்கியத்துறையில் கால் நூற்றண்டுக்கும் மேலாக அமைதியாக ஈடுபட்டு வருபவர் திரு. ப. சிறிஸ்கந்தன். ஈழமண்ணில் வருடாந்த சுதேசிய விளையாட்டு-நாடகம் மற்றும் கலைத்துறை ஆகியவற்றுக்குப் பெயர்போன அரியாலை இவரது பிறந்த மண். அண்மையில் இவர் அங்கு பயணம் மேற்கொண்டவேளை, 94வது சுதேசிய விழா பெருவிழாவாக நடைபெற்றது. அவ்விழாவில், தங்கள் மண்ணின் மைந்தனை அரங்கிலமர்த்தி அவரது பணிகளை வியந்துகூறி, இன்றைய தலைமுறையினருக்கு அவரை அறிமுகம் செய்யும் வகையில் பட்டுச் சால்வை போர்த்து, சந்தனமாலை சூட்டி, பாராட்டுப் பட்டயம் வழங்கி மதிப்புச் செய்தனர் ஊர்மக்கள். அதன்போது எடுக்கப்பட்ட ஒளிப்படத்தை இங்கு காணலாம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# வாசிப்பு - ஒரு தினிசு

'நவில் தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு'

- குறட்பா 783

பொருள்:
பழகப் பழகப் பண்புடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்க கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போல்வதாகும்.

இலக்கியம் கண்டுதான் இலக்கணம் இயம்பினர். நல்லவரின் நட்பு மேலான நூலுக்கு மேலதாகும். நல்ல நூலுக்கு எடுத்துக் காட்டல் குறட்பா ஒன்றே போதும். நல்ல நட்பும் இனிய யாவும் உயர்ந்தவை. நட்பு என வள்ளுவனார் பாடாமற் தொடர்பு என்றார். அஃது என்றும் அழியாததாகும். இப்போ புரிகிறது உயர்ந்த பாவருமை. நாலடியாரும் குறளும் பாவருமையாற் பேர் போனவை. ஆயிரத்தில் ஒரு நூல். பதினாயிரத்தில் ஓர் நூல் மாதிரிக்குப் போதும். கல்கியின் சிவகாமியின் சபதம் நல்ல எடுத்துக் காட்டாகும். இவ்வண்ணமே - பாரதியார் பாட்டைக் கொஞ்சம் படிச்சுப் பாராடி பாடின வாய் தேனூறும் குடிச்சுப் பாரடி என்ற பாவடி போதும் பாரதியார் பாட்டை உரைத்துப் பார்க்க. கம்பனுக்கு மேலே புலவனுமில்லை, காளிதாசனுக்கு மேலே கவிஞனுமில்லை. ஆக மேலான பாடல்கள் படிப்போரைக் காந்தமாய் ஈர்க்கும். எனவே அதுதான் பாரதி சொன்ன பாட்டுத் திறம். ஆகவே படித்துப் படித்து சுவைக்க நெஞ்சை அள்ளும், அப்பாடற் பெருமையை பாரதி நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றான் பாரதி. ஆக நூல் நயம் படிக்க வைக்கும்.

உயரிய பாவாலியன்ற இலக்கியங்கள் எம்மொழியிலும் நிலையானவை. ஜெகப்பிரியரின் கலைப் பொக்கிஷங்கள் போலத் தமிழிலும் நிறைந்து வழிகின்றன. இந்த நூலும் வாசனையும் வாசிப்பாளனும் இருக்குமட்டும் உலகம் அழியாது. அடிச்சுவட்டில் இருந்து எத்தனையோ படைப்புகள் செம்மொழியான தமிழிலும் உள. அரிவரியைத் தாண்டி பிரதம வகுப்புகளில் வாசிப்பு ஒரு பாடமாக அன்றும் இன்றும் உள. அரிச்சுவட்டின் பின்னணியாக அவ்வையின் ஆக்கங்கள் பட்டொளி விட்டுப் பறக்கின்றன. அங்கேயிட்ட கால்கோள்கள் வளர்ந்து விசால விருட்சங்கள் ஆயின. அவையே மொழிகள் பூவாடையும் பாவாடையுமாம். வடமொழிச் சான்றோரில் இருந்து தென்மொழிப் புலவர்வரை வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத தேன்களவை.

நம் தேயமான யாழில் இன்றும் கந்தபுராண படனம் நடைமுறையில் இருக்கின்றனவே. முப்பொருளின் உண்மையையும் - மும்மலத் தாக்கங்களையும் காலாகாலமாகக் காக்கத்தான் கச்சியப்பரின் ஏடு பாதுகாக்கப்படுகிறது. இவ்வண்ணமே பாரத காவியம் மொழியையும் பொருளையும் காக்கவே வாய்மொழியில் இருந்து உருமாறிய பல மொழிகள் இலக்கியங்களுமுள. இவை காலத்தின் கட்டாயத்தால் அச்சாகின அன்றோ. இப்படி நாட்டம் விடின் வாய்மொழிதான் அச்சாயின. இவை பின்னர் மக்களாற் படிக்கப்பட்டன. அவையே நம் மூல நூல்களாம். திண்ணைப் பள்ளிகளில் படிப்பிக்கப் பயன்பட்டன. உதாரணம்:- நிகண்டுகள். ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிய மக்கள் பேப்பரில் எழுதத் துவங்கினர். செய்யுள் வடிவம் வசன நடையாக மாறியது. இந்த வசன நடையை ஆக்கியவர் நாவலர் பெருமான். எனவே அவரை வசன நடை கைவந்த வல்லாளர் எனப் போற்றினர்.

அச்சு யந்திரங்கள் வந்தன. பெரும் புலவர்கள் படித்த நூலையே திரும்பத் திரும்பப் படித்துப் பயிற்சி செய்தனர். ஏலவே குறிப்பிட்டதுபோலச் சீவிய காலம் முழுவதும் இது நடைமுறையில் இருந்தது என அறியக் கிடக்கிறது. மாதிரிக்காக ஒன்று கூறுகிறோம். உலகப் புகழ் பூத்த உ.வே.சுவாமிநாத அய்யர் அவர்கள் மதியப் போசனம் முடிந்ததும் தனது ஓய்வுகூடத்தில் - தன் நாளாந்த பயிற்சியாக, நாலடியார் என்ற கீழ்க் கணக்கு நூலைப் படிக்கும் வாடிக்கையாக மேற்கொள்வார். மிக உயரிய நூலது. வெண்பா வடிவம். முப்பொருள் பற்றிய ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பது ஆன்றோர் வழக்கு. நாலும் இரண்டும் என்பதில் நாலு என்பது நாலடியார் இரண்டு என்பது திருக்குறள். பொறுமையோடும், சிரத்தையோடும் இதை மேற்கொள்வாராம். மனனம் செய்வதும் உண்டு. இவ்வாறே நல்லைநகர் நாவலரும் செய்வதுண்டு. அவர் திருக்கோவையாரையும், திருக்குறளையும் படிப்பாராம். இக்கருமத்தின் இன்றியமையாமையை நாம் ஒவ்வொருவரும் மனதிற் கொள்வோம்.

இது ஒரு வாசிப்பு முறையுமாம். இஃது ஒரு படிப்பு முறையுமாம். நம் மொழியில் மட்டுமன்றி ஜெகப்பிரியரின் பாடல்களை நாளும் பொழுதும் படித்துப் பலர் மேதைகள் ஆயினர். நாவலரின் மருகர் இராமாயணத்தை மீள மீளப் படித்து விற்பன்னராயினார். யாழ் மண்ணிலே சைவசித்தாந்த விற்பன்னர் நாளும் பொழுதும் படிப்பது நாளாந்த வழக்கமாகும். இந்த வாசிப்பு முறையை நாமும் கைக்கொண்டு முன்னேறுவோமாக. சேர வாரும் ஜெகத்தீரே. எங்கள் நேரங்களைப் பயனுள்ள பொழுதுகளாக மாற்றுவோம். இன்றைய தமிழ் உலகில் பல கலை விற்பன்னர் இவ்வழியில் தம்மை வழிநடத்தியுள்ளனர்.

எப்போதும் தமிழோடு உறவாடுவோம்.
எழிலான மொழி பேசி உயர்வாகுவோம்.
தப்பேதும் இல்லாமல் தமிழ் பேசுவோம்.
தரணியில் நம் மொழியை
தலையாக்குவோம். முப்போதும்
பணிவோடு தமிழ் பேசுவோம்.
முருகனுடனே தமிழால் உறவாடுவோம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS - HEALTH CARE - TECHNOLOGY

Est. 1991

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

- Living Expenses
- Transportation
- ChildCare
- Books
- Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 67



## சங்க காலத்தில் சமயம் முதலிடம் பெறவில்லை

நான் கடந்த சில மாதங்களாக மாணிக்கவாசகர் இயற்றிய சைவ திருவெம்பாவை பற்றியும் ஆண்டாள் பாடிய வைணவ திருப்பாவை பற்றியும் எழுதுவதைப் பார்த்துவிட்டு சிலர் புருவத்தை உயர்த்துகிறார்கள். பகுத்தறிவுவாதி நக்கீரனுக்கும் சமய இலக்கியங்களுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறார்கள்.

இந்தத் தொடர் என்றுமுள்ள செந்தமிழ் பற்றியது. அதில் தமிழில் உள்ள சமய இலக்கியங்களும் அடங்கும்.

உண்மையில் இதன் தலைப்பு கம்பரிடம் இருந்து கடன் பெற்றது. கம்பர்தான் என்றுமுள்ள தென் தமிழ் என்ற சொற்றொடரைத் தாம் பாடிய இராம சரித்திரத்தில் கையாண்டுள்ளார். அதை அப்படியே பயன்படுத்தி இருக்கலாம். என்ன நினைத்தேனோ அதனை என்றுமுள்ள செந்தமிழ் என்று என்னை அறியாமலேயே மாற்றிவிட்டேன். என்றுமுள்ள செந்தமிழ் செம்மையையும் என்றுமுள்ள தென்தமிழ் தெற்கேயுள்ள தமிழையும் குறிக்கும் அடைகள் ஆகும்.

இவை நீங்கலாக தமிழ்மொழிக்கு அந்தமிழ், அன்னைத்தமிழ், அருந்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், ஒண்டமிழ், இன்றமிழ், மன்றமிழ், நற்றமிழ், பொற்றமிழ், முத்தமிழ், தேந்தமிழ், தீந்தமிழ், பூந்தமிழ், பழந்தமிழ், இளந்தமிழ், இருந்தமிழ், இசைத்தமிழ், இயற்றமிழ், இன்பத்தமிழ், நறுந்தமிழ், மாத்தமிழ், சீர்த்தமிழ், தாய்த்தமிழ், ஒளிர்த்தமிழ், குளித்தமிழ், உயர்தமிழ், வளர்தமிழ், மறத்தமிழ், அறத்தமிழ், திருத்தமிழ், எழிற்றமிழ், தனித்தமிழ், கனித்தமிழ், பொங்குதமிழ், கொஞ்சுதமிழ், விஞ்சுதமிழ், விளங்குதமிழ், பழகுதமிழ், அழகுதமிழ், தூயதமிழ், ஆயதமிழ், கன்னற்றமிழ், வண்ணத்தமிழ், தெய்வத்தமிழ், வெல்கதமிழ், கன்னித்தமிழ், பசுந்தமிழ், பைந்தமிழ், முத்தமிழ், திருத்தமிழ், தெய்வத்தமிழ், அமிழ்தினுமினிய தமிழ் என ஏராளமான அடைகள் இருக்கின்றன.

சம்பந்தர் தன்னை தமிழ் ஞான சம்பந்தன் என்றே குறிக்கிறார். நலங்கொள் தமிழ், சந்தமொடு செந்தமிழ், சங்கத் தமிழ், சங்கமலித் தமிழ், சீரின்மலி செந்தமிழ் என 45 இடங்களில் தமிழைப் போற்றி இருக்கிறார்.

பாரதியார் தமிழன்னை புகழ் ஏறி என்றும் புவிமிசை இருப்பாள் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்.
தேன் என்ற ஒரு சொல் தமிழில் எப்படியெல்லாம் சிலம்பம் ஆடுகிறது?

கொல்லிமலைக் காட்டிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டுவரும்படி சொல்லியிருந்தேன். அவன் அன்று வராமல் மறுநாள் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன். அவன் பேசினான்.
"நேற்றே மலைக்கு நடந்தேன், பலவிடங்களில் அலைந்தேன், இறுதியில் பெரும் பாறைத்தேன் கண்டு சிறிது மலைத்தேன், ஒரு கொடியைப் பிடித்தேன், ஏறிச் சென்று கலைத்தேன், சட்டியில் பிழிந்தேன், நன்றாக வடித்தேன், அதனைக் கண்டு மகிழ்ந்தேன், அதில் சிறிது குடித்தேன், களித்தேன், அயர்ந்தேன், மறந்தேன், இன்று காலை எழுந்தேன், நினைத்தேன், தேனை அடைத்தேன், எடுத்தேன், விரைந்தேன், நடந்தேன், வந்தேன், சேர்ந்தேன், இப்போதுதான் உங்கள் ஆளிடம் கொடுத்தேன்" என்று.
நானும் இதைக்கேட்டு மகிழ்ந்தேன். அவனுக்கு உரியதையும் தந்தேன். அடடா! எப்படித் தேன்? எவ்வளவு தேன்? ஒவ்வொரு சொல்லிலும் தேன் சொட்டுகிறதே! இதைப் பார்த்தேன், குடித்தேன் என்று கூறாமல் "படித்தேன்' எனக் கூறுங்கள். அப்பொழுதுதான் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு படி "தேன்' என உருசிக்கும்.
மனிதன் கடவுள் நிலையை அடைவதற்கான வழியினைக் காட்டுவதுதான் மதம் அல்லது சமயம். வழிகள் பலவாகினும் இலக்கு ஒன்றுதான். ஆனால் அந்த வழிகள் பிற்காலத்தில் வெவ்வேறு மதங்கள் அல்லது சமயங்களாக உருவெடுத்தன.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் சங்க காலத்தில் தமிழர்கள் பெரும்பாலும் சமய சார்பற்றவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். சமயம் முதலிடம் பெறவில்லை. அவர்கள் காலத்தில் நிறுவன சமயம் இருக்கவில்லை. இயற்கை வழிபாட்டையே கொண்டிருந்தனர். இதனால் சங்க கால இலக்கியங்கள் பெரும்பாலும் சமய சார்பற்றதாகவும் சார்வாக போக்குடையதாகவும் இருந்தன.
சங்கால இலக்கியங்கள் காதல், வீரம் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. காதலை அகம் என்றும் வீரத்தைப் புறம் என்றும் கூறவர். சங்க காலத்தில் மக்களின் கொள்கையும் பண்பாடும் காதலும் வீரமுமாக இருந்ததால் அகப்பொருள், புறப்பொருள் இலக்கியங்களே அக்காலத்தில் புலவர்களால் எழுதப்பட்டன. நீதியையும் அறத்தையும் ஒழுக்கத்தையும் கூறுகிற இலக்கியங்களும் இருந்தன. ஆனால் அவை காஞ்சி எனப் பெயர் பெற்றுப் புறப்பொருள் இலக்கியத்தில் இடம்பெற்றன.
பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சமய நூல்கள் எழுதப்பட்டன. ஆனால் அவை சங்ககால இறுதியில் எழுதப்பட்டவை ஆகும்.

மாயோன், சேயோன், வேந்தன் (பின்னால் இந்திரன் என அழைக்கப்பட்டான்) வருணன் ஆகிய நால்வகை நிலங்களுக்குரிய தெய்வங்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதில் மாயோனுக்கு பூவை நிலை என்னும் துறை! சேயோனுக்கு வெறியாடல் என்னும் துறை! வேந்தன், வருணனுக்கு இப்படியான துறைகள் எதுவும் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை! அய்ந்தாவது நிலமான பாலைக்குரிய தெய்வம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தொல்காப்பியப் பொருள் இலக்கணத்தில் கொற்றவை நிலை என்னும் ஒரு பிரிவு சொல்லப்படுகிறது. போருக்குச் செல்வோர் கொற்றவையின் பெருமைகளைக் கூறி அத் தெய்வத்தை வழிபட்டுச் செல்லுதலே கொற்றவை நிலை எனப்படுகின்றது.

நால்வகை நிலத்துக்குரிய கடவுளர் அந்தந்த நிலத்துக்குரிய மக்களால் வழிபடப்பட்டனர். மாயோன் முல்லை நில மக்களால் வழிபடப்பட்டான். சேயோன் குறிஞ்சி நில மக்களால் வழிபடப்பட்டான். இதில் யாரும் முழுமுதற் கடவுளாக வழிபடப்படவில்லை. நடுகல் வழிபாடு மட்டும் எல்லா நில மக்களுக்கும் பொதுவாக இருந்தது. சிவன் என்ற சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் சிவனைக் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கும் பல பெயர்கள் சங்ககாலச் செய்யுட்களில் தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன், முக்கட் செல்வன், கறைமிடற்று அண்ணல், ஆலமர் தெய்வம், மழைதலை வைத்தவன் போன்றவை இடம்பெற்றுள்ளன.
பிற்காலத்தில் மாயோன் கருப்பு நிறத்தவன் என்ற முறையில் திருமாலோடு இணைக்கப்பட்டான். சேயோன் சிவந்தவன் என்ற பொருளில் முருகனோடு இணைக்கப்பட்டான். ஆனால் அன்றைய மாயோன், சேயோன் ஆகியோருக்கும் இன்றைய திருமால், முருகன் ஆகியோருக்கும் ஒற்றுமைகள் சிறிதளவே இருக்கின்றன. சங்க காலத்தில் மாயோன், சேயோன் ஆகியோருக்குப் பலியிடுவது வழக்கமாக இருந்தது. இன்று அப்படிப்பட்ட வழக்கம் இல்லை.
வீரக்கல் அல்லது நடுகல் வழிபாடு சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. போர்க்களத்தில் வீரனது ஆற்றலையும் தற்கொடையையும் போற்றும் வகையில் ஊர்ப்புறத்தே நினைவுக் கல் நடப்பட்டு நீரும் பூவும் சொரிந்து வழிபாடு நடந்தன. சங்க காலத்தில் எந்த அரசனும் சிவனுக்கோ திருமாலுக்கோ, முருகனுக்கோ கோயில் கட்டியதாக செய்தி இல்லை. இருந்தும் சங்க காலத்திலும் அதனை அடுத்தும் தமிழர்கள் பல்வேறு சமய மரபுகளை அறிந்தும் பின்பற்றியும் வந்துள்ளார்கள். தமிழர்கள் பவுத்தம், சமணம், இந்து (சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், சவுரம், கவுமாரம்), இஸ்லாம், கிறித்தவம் ஆகிய பெரும் சமயங்களைக் காலத்துக்குக் காலம் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

சாத்தன், அய்யனார், கண்ணகி அம்மன், முனியப்பர், சுடலைமாடன், மதுரை வீரன், காத்தவராயர் போன்ற சிறுதெய்வ வழிபாடு அல்லது குலதெய்வ வழிபாடு தமிழர்களிடம் பரவி இருக்கின்றது.
அதே வேளை, இறைமறுப்பு (நாத்திகம்) உலோகாய்தக் கொள்கை, இயற்கை நம்பிக்கை கொண்ட பல தமிழர்களும் உள்ளார்கள்.

இந்தியாவில் முதல் நாத்திகச் சிந்தனை மரபான சார்வாகம் அல்லது உலோகாய்தம் கிமு 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தத்துவ இயலின் சார்வாகப் பிரிவானது, இறை மறுப்பு, பருப்பொருள் சார்பு மற்றும் இயற்கை இயைமை ஆகிய நம்பிக்கைகளைக் கொண்டது.

இறந்த பின்னர் மறு வாழ்வு உண்டென்று சார்வாகம் நம்புவதில்லை. தனிமங்களிலிருந்து கிளர்ந்தெழுந்ததான பருப்பொருள் அழிகிறது. அது அழிந்த பின்னர் ஏதும் நிலைப்பதில்லை. மதம் என்பது மனிதனின் கண்டுபிடிப்பே எனவும் இறைவன் இல்லை, இம்மை, மறுமை, பிறவிச் சுழற்சி, நரகம், சுவர்க்கம் இல்லை எனவும் சார்வாகம் கருதியது. கடவுள் என்பதும் மனிதனை விஞ்சிய உயர்சக்தி என்பதும் அழிவற்ற ஆன்மா என்பதும் பொய். நேரடியாக அறிவது மட்டுமே உண்மை என்ற கோட்பாட்டைக் கொண்டது.

சென்ற நூற்றாண்டில் சார்வாகக் கோட்பாடுகளைப் பெரியார் ஏற்றுக்கொண்டு கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்று பரப்புரை செய்தார். புரோகிதரின் சடங்குகளைச் சாடினார். அவை புரட்டுக்கள் என்றார்.

சங்க காலத்தில் சமணம், பவுத்தம் தமிழ்நாட்டில் பரவியது. ஆனால் மக்கள் அவற்றை எளிதில் ஏற்றுக் கொள்ளவில்லை. சங்க காலத்துத் தமிழர்களது வாழ்வியல் குறிக்கோள்களுக்கும் சமண, பவுத்த சமயங்களின் குறிக்கோள்களுக்கும் முரண்பாடுகள் இருந்தன. (வளரும்)●




| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அறலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்







- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

*Chapel Ridge*

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# டென்னிஸ் உலகின் புதிய நாயகன் ரசோலா

விம்பிள்டன் டென்னிஸ் வரலாற்றில் 2005ஆம் ஆண்டிற்குப்பிறகு ஒரு 2ஆம் தரநிலை வீரர் 2வது சுற்றில் அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறியது நிகழ்ந்தது. அந்த வீரர் ரஃபேல் நடால், தனது அபாரமான, நம்பமுடியாத ஆட்டத்தினால் நடாலை வீட்டுக்கு அனுப்பியவர் லூகாஸ் ரசோல் என்ற செக்.குடியரசு வீரர்!

ரஃபேல் நடாலோ பிரெஞ்ச் ஓபனை சமீபத்தில்தான் 7வது முறையாக வென்று சாதனை படைத்தவர். மேலும் 10க்கும் மேற்பட்ட கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர். பெடரர், ஜோகோவிச் போன்ற பெருந்தலைகளையே வீழ்த்தியவர்.

இப்படியிருக்கும் நடாலை அதிர்ச்சித் தோல்வியுறச்செய்த செக்.குடியரசு வீரர் லூகாஸ் ரசோலை டென்னிஸ் உலகிலேயே யாரும் அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. இவருக்கும் வயது 26, நடாலுக்கும் வயது 26.

லூகாஸ் ரசோல் இதுவரை அதிகபட்சமாக எட்டிய ஏ.டி.பி. தரநிலை 65ஆகும். மேலும் கடந்த 5 ஆண்டுகளாக விம்பிள்டன் தகுதி சுற்றுப் போட்டிகளில் விளையாடி தோல்வியடைந்து பிரதான சுற்றுக்குத்தகுதி பெறாமல் போனவர்.

இதற்கு முன் எந்த ஒரு டென்னிஸ் தொடரிலும் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாத ரசோல் நடாலை வீழ்த்தியவுடன் உலகப் புகழ் பெற்றுள்ளார். புதிய நாயகன் உதயமாகிவிட்டார் என்ற அளவில் அவரைப் பற்றி புகழ்ந்து பேசப்படுகிறது.

ஏனெனில் ஆடிய ஆட்டம் அத்தகையது. பயங்கரமான சர்வ்கள் அதுவும் முதல் சர்வில் சோடைபோகாத துல்லியம், நடாலின் சர்வ்களை ரிடர்ன் எடுத்து அடிப்பதில் மணிக்கு 95 மைல்கள் வேகம் கொண்ட ஷாட், என்று ரசோலின் ஆட்டம் தற்போது அணு அணுவாக ஆராயப்பட்டு வருகிறது.
சாம்ப்ராஸ் போன்று நல்ல உயரம், 80கிலோ எடை கொண்டவர் என்று தெரியாத ஒல்லியான உடல்வாகு கொண்ட ரசோல் அடித்த பல ஷாட்கள் நடாலுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது.
எப்போதும் வெற்றியையே குறிவைத்து ஆடினார் ரசோல். முதல் செட்டில் டை பிரேக்கரில் 9- 11 என்று நடாலை அச்சுறுத்தி இழந்த ரசோல் அதற்கு அடுத்த இரண்டு செட்களில் 6- 4, 6- 4 என்று வெற்றி பெற நடால் ரசோலை திரும்பிப் பார்க்கத் தொடங்கினார்.

4வது செட்டில் நடால் தன் ஆட்டத்தை பல்வேறு விதமாக மற்ற வேண்டியிருந்தது. இதில் 6- 2 என்று நடால் வெற்றிபெற ஆட்டம் 5வது செட்டிற்கு சென்றது. இடையே சிறிது தடங்கல் ஏற்பட்டது.
2வது மற்றும் 3வது செட்களை ரசோல் 34 மற்றும் 37 நிமிடங்களில் கைப்பற்றினார். அவரது சர்வை கடைசி வரை நடாலினால் திருப்திகரமாக திருப்பி எடுக்க முடியவில்லை. சர்வில் அசாதாரணமாக இருந்ததும், நடாலின் சர்வை திருப்பி எடுத்து அதிரடி ஷாட்களை ஆடியதும் நடாலுக்கு சற்றும் எதிர்பாராத ஒரு தோல்வி அச்சத்தை ஏற்படுத்தியது.

சில ஷாட்கள் நடால் எட்டக்கூடிய தூரத்தில் சென்றாலும் சென்ற வேகம் பயங்கரம். இதில் நடால் நிலை குலைந்தார். நடால் கைக்கு அருகில் ரசோலின் ஷாட் சென்றாலும் வேகம் நடால் எதிர்பார்க்காத வேகமாகும். மேலும் ரசோல் நல்ல உயரம் என்பதால் அடிக்கும் சர்வ்கள் பிட்ச் ஆகி நடாலின் தோள்பட்டை உயரத்திற்கு எழும்பியது நடாலின் ரிடர்ன்களை வெத்தாக்கியது.

இப்போது அடுத்த போட்டியை ரசோல் எப்போது ஆடுவார் என்ற ஆர்வம் டென்னிஸ் உலகில் எழுந்துள்ளது.

நடாலைப்பொறுத்தவரை தான் கடுமையாக ஏமாற்றமடைந்தேன் என்று கூறியுள்ளார். இது ஏதோ இறுதிப் போட்டியோ, அரையிறுதியோ கிடையாது, 2வது சுற்றில் திடீரென ஒரு உத்வேகமான வீரரை எதிர்கொண்டார் அவரால் இந்தத் திடீர் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் போனது.
ஆனால் தன்னடக்கமான ரசோல் என்ன கூறுகிறார் என்றால் ஒருநாளில் நடால் போன்ற மிகப்பெரிய வீரர்களை வெற்றி பெறுவேன் மற்றொரு நாளில் தரநிலையில் 500-இல் உள்ள வீரரிடம் தோல்வி கூட அடைவேன். இது ஒரு கேம் இதில் என்னவேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் நான் ரபேல் நடாலுக்காக வருந்துகிறேன் என்றார் ரஸோல்.
டென்னிஸ் உலகின் புதிய நாயகன் ரசோலா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®

You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரியதோர் முதலீடு

# வீடு வாங்க விற்க



**ஈசன் குலசேகரம்**
Sales Representative
**416 835 1700**
info@esanhomes.com

- வீடுகள் • தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள் • காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage

**விக்கி வேலாயுதன்**
Sales Representative
**416 457 7162**
vvelauthan@yahoo.com



அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.**esanhomes**.com

**2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Reposed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

77

இம்முறைத் தொடரில் கனடாவில் செல்வந்த மாகாணமாக மாறிவருகின்ற அல்பேட்டா (Alberta) மாகாணம் பற்றிய ஒரு பார்வையாக அமைகின்றது.

இந்த மாகாணம் கனடாவின் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கின்றது. இதன் முக்கியமான நகரங்களாக கல்காரி (Calgary), எட்மண்டன் (Edmonton) என்பன இருக்கின்றன. கனடாவின் ஏற்றுமதிப் பொருளாதாரத்திலும், உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் இன்று இந்த மாகாணம் முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம் பெற்றோலிய உற்பத்தி மற்றும் நிலத்தின் கீழ் இருக்கும் இயற்கை வாயு கனிவளங்கள் நிறைந்த மகாணமாக இது திகழ்கின்றது.

இது மாத்திரமல்லாமல் காட்டுமரங்கள் ஏற்றுமதியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்காவில் வீடுகளின் கட்டுமானப் பணிகள் 2013ஆம் ஆண்டு சற்று முன்னேற்றம் கண்டு வருவதும் அதன் காரணமாக காட்டு மரங்களின் தேவை அதிகரித்திருப்பதும் அல்பேட்டாவுக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

கனடா புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, 2011, 2012ஆம் ஆண்டுகளில் ஏனைய மாகாணத்தினை விட பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் நிற்கின்றது.

2012ஆம் ஆண்டு கனடாவின் பொருளாதார வளர்ச்சி (மொத்த உள்நாட்டு உற்பத்தி) 1.8 சதவீதமாக இருந்தபோதும் அல்பேட்டா மாகாணத்தின் வளர்ச்சி 3.9 சதவீதமாகக் காணப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு கனடா முழுவதுமான சராசரி வளர்ச்சி 2.6 வீதமாக இருந்தபோது இதன் வளர்ச்சி 5.3 சதவீதமாகக் காணப்பட்டது.

குறிப்பாக பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி அதனைச் சார்ந்த உப தொழில் துறைகள், வீடு மற்றும் கட்டுமான செயற்பாடுகள், மர உற்பத்தி சம்பந்தமான பல்வேறு துறைகளின் வளர்ச்சி இந்த மாகாணத்தினை கனடாவின் ஏனைய மாகாணங்களை விட பொருளாதார ரீதியில் முன்னிலைப்படுத்திக் காட்டுகின்றது.

அடுத்த நிலையாக, இங்கு மாகாண அரசின் விற்பனை வரி கிடையாது. கனடாவில் இந்த ஒரு மாகாணம்தான் விற்பனைவரி இல்லாத மாகாணமாக இருக்கின்றது. ஆனால், இதில் இருக்கும் முக்கிய விடயம் என்னவென்றால், இந்த மாகாணத்தில் வசிப்பவர்களுக்குத்தான் இந்த சலுகை. ஏனைய மாகாணத்தவர்கள் இங்கு பொருட்களையோ, சேவைகளையோ பெறும்பொழுது 10 சதவீத விற்பனை வரி (Sales tax) செலுத்தவேண்டும். இதேபோன்று வருமான வரியில் தனிநபர் ஒருவருக்குரிய வருமானவரி விலக்குள்ள தொகை 2012 ஆம் ஆண்டு 17,282 டாலராகக் காணப்படுகின்றது. இது எமது மாகாணத்தில் 2012 ஆம் ஆண்டு 9,405 டொலர்களாக இருந்தது.

வேலையற்றோரின் விகிதம் கனடாவில் சராசரியாக 7 வீதமாகக் காணப்படுகின்றபொழுது, இங்கு 4.4 வீதம் தொடக்கம் 4.8 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாக 2013ஆம் ஆண்டு மே மாத புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

2011ஆம் ஆண்டு யூன் தொடக்கம் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் வரையில் கனடாவில் ஏனைய மாகாணங்களில் இருந்து ஏறத்தாழ 29,000 பேர் இங்கு குடிபெயர்ந்துள்ளனர். இதில் 10,700 பேர் வரையில் எமது மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள். வேறு உலக நாடுகளில் இருந்து புதிய குடிவரவாளராக வருபவர்கள் ஏறத்தாழ 34,500 பேர் நேரடியாக இங்கு குடியேறியுள்ளனர்.

இன்று எமது சமூகத்தினைச் சேர்ந்த பலர் இந்த மாகாணத்திற்கு வேலைவாய்ப்புக் காரணமாக ரொறன்ரோ மற்றும் மொன்றியல் பகுதிகளிலிருந்து சென்றுகொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்னும் முதுமொழி காலத்தின் தேவை கருதி நினைவுபடுத்தப்படுதல் அவசியமாகின்றது. எனவே, இந்த மாகாணத்தின் பொருளாதார தகவல்களும் தரவுகளும் எம்மவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்

**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
**416 261 4737**

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
**416 266 3077**

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

## தமிழறிவோம்!

தமிழில் டீக்கு "தேநீர்', காபிக்கு "குளம்பி' என்று பெரும்பாலோருக்குத் தெரியும். மற்றைய சில முக்கியமான உணவுப் பொருட்களின் தமிழ்ப்பெயர்கள் அறிவோம்!

சப்பாத்தி - கோந்தடை
புரோட்டா - புரியடை
நூடுல்ஸ் - குழைமா
கிச்சடி - காய்சோறு, காய்மா
கேக் - கட்டிகை, கடினி
சமோசா - கறிப்பொதி, முறுகி
பாயசம் - பாற்கன்னல்
சாம்பார் - பருப்பு குழம்பு,
மென்குழம்பு
பஜ்ஜி - தோய்ச்சி, மாவேச்சி
பொறை - வறக்கை
கேசரி - செழும்பம், பழும்பம்
குருமா - கூட்டாளம்
ஐஸ்கிரீம் - பனிக்குழைவு
சோடா - காலகம்
ஜாங்கிரி - முறுக்கினி
ரோஸ்மில்க் - முளரிப்பால்
சட்னி - அரைப்பம், துவையல்
கூல்ட்ரிங்க்ஸ் - குளிர் குடிப்பு
பிஸ்கட் - ஈரட்டி, மாச்சில்
போண்டா - உழுந்தை
ஸர்பத் - நறுமட்டு
சோமாஸ் - பிறைமடி
பப்ஸ் - புடைச்சி
பன் - மெதுவன்
ரோஸ்டு - முறுவல்
லட்டு - கோளினி
புரூட் சாலட் - பழக்கூட்டு...

*நன்றி: தமிழன் வரலாறு*

---

## தந்தையும் மகளும் விபத்தில் பலி!

ஒன்ராறியோ மாகாணத்தின் பிராம்டன் நகரில் கடந்த மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் தந்தையும் மகளும் மரணமானார்கள். தமிழர் சமூகப் பற்றாளரும் தேசிய உணர்வாளருமான கோபிநாதன் தங்கவேலு (40), ஆரணி (5) ஆகிய இருவருமே விபத்தில் மாரணமானவர்கள். வாகனத்தை ஓட்டிச்சென்ற கோபிநாத் தங்கவேலுவின் மனைவியும், மூன்று வயதான மற்றொரு மகளும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் பயணம் செய்த வாகனமும், பிக்-அப் ட்ரக் ஒன்றும் இரவு வேளையில் விபத்தில் சிக்கின. இதில் மதுபானப் பாவனை எதுவுமில்லையென்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**
**Small Business Income Tax**
**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

## நாட்டுக்கூத்து அண்ணாவியார்
# திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை (திரவியம் மாஸ்டர்)

இளவாலை போயிட்டி என்ற இடத்தில் 1.9.1926ம் ஆண்டு திரு.எஸ்.அந்தோனிப்பிள்ளை அவர்கள் சூசைமுத்து - மரியம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவருக்கு செல்வரத்தினம், வில்வீனம்மா என்று இரு சகோதரிகள். குழந்தையாக இருந்த போதே தன் பெற்றோரை இழந்தவரை அவரது உறவினரே எடுத்து வளர்த்தனர்.



அவர் முதலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது யேசுபாலனாக இசை நாடகத்தில் பாடி நடித்துப் பாராட்டுப் பெற்றார். தனது ஏழு வயதில் அவரது கிராமத்தில் நடந்த சந்தியோகுமையோர் நாடகத்தில் சந்தியோகுமையோராகவும், தேவதூதனாகவும் நடித்து, பதின்மூன்றாவது வயதில் இருந்தே நாட்டுக் கூத்துகளில் பாடி நடிக்கத் தொடங்கினார். மதியூகசேகரன் நாட்டுக்கூத்தில் மதியூகசேகரனாகவும், கற்பலங்காரி நாட்டுக்கூத்தில் ஒரே ஒருநாள் ஒத்திகையுடன் கற்பலங்காரனாகவும், சங்கிலியன் நாட்டுக்கூத்தில் இளம் சங்கிலியனாகவும், விஜயமனோகரன் நாட்டுக்கூத்தில் ஆஞ்சலோ பிரபுவாகவும் நடித்துள்ளார்.

1960களில் கொழும்புத்தறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த போது இவரது ஆசிரியத் தோழர்களான திரு.முத்துராசா (பிற்காலத்தில் கிழக்குப் பிராந்தியக் கல்வியதிகாரி), அதிபராக விளங்கிய திரு.யோசேப்பு, முருங்கனில் பணியாற்றிய திரு.குழந்தை ஆகியோரோடு இணைந்து பல நாடகங்களை எழுதியும் நடித்தும் இருந்தார். புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இவரது திறமையைக் கண்ட காலஞ்சென்ற யாழ் ஆயர் மேதகு தீயோகுப்பிள்ளை ஆண்டகை அவருக்கு கல்வியிலும் கலையிலும் மிகுந்த ஊக்கம் கொடுத்தார்.

மன்னார்-முருங்கன் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் 1956முதல்1960 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். களுத்துறை- சீனன்கோட்டை, பேருவல முஸ்லிம் மகா வித்தியாலயங்களில் உப அதிபராகப் பணியாற்றியிருந்தார். சமய பாடத்துக்கு ஆசிரியர் இல்லாத காரணத்தால் தானே திருக்குர்ஆனைக் கற்று மாணவர்களுக்குக் கற்பித்தார். 1966களில் செம்பியன்பற்று றோ.க.பாடசாலையில் உப அதிபராகப் பணியாற்றினார். அவ் வேளை அவர் தனது மாணவர்களையும் எங்களில் மூவரையும் அழைத்துக் கொண்டு சுற்றுலா சென்றதை மறக்க முடியாது. 1970களில் வல்வெட்டித்துறையில் சிவகுரு வித்தியா சாலை, வல்வை மகளிர் வித்தியாசாலைகளில் உப அதிபராகப் பணியாற்றிய காலத்தில் தனது கல்விப் பணியோடு ஊர்ச் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்களுக்கு தனது கலைப்பணியையும் நிறையவே ஆற்றியிருந்தார். 1972களின் பின் வவுனியா - முதலியாகுளம், இளமருதங்குளம் வித்தியாலயங்களில் அதிபராகப் பணியாற்றினார். யாழ்-கலட்டி றோ.க.பாடசாலை, குடத்தனை றோ.க.பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் ஓலைக்கூரைப் பாடசாலைகளாக இருந்த அந்தப்பாடசாலைகளை கலை நிகழ்வுகள் நடத்தியும் ஊர் மக்களிடம் நிதி திரட்டியும் ஓட்டுப் பாடசாலைகளாக மாற்றினார். யாழ்-புலோலி றோ.க.பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி 1986ல் ஓய்வு பெற்றார்.

கிராம மக்களுக்காகவும், பாடசாலை மாணவர்களுக்காகவும் அவர் முப்பதுக்குமேற்பட்ட நாடகங்கள் எழுதினார். பல நாட்டுக்கூத்துகளை மீள இலகுநடையில் எழுதிப்பழக்கி மேடை ஏற்றியுள்ளார். கைரேகை பாாப்பதிலும் ஆர்வமும் திறமையும் கொண்ட அவர், நாட்டு நிலைமை வலிந்து துரத்தியதால் இந்தியா-தமிழகத்தில் மூன்று வருடங்கள் வாழ்ந்தவேளை கைரேகை சாஸ்திரம், குறிப்பெழுதல் பற்றி மேலும் கற்றுக் கொண்டார். மிசிசாகா முதியோர் மன்றம் தோற்றம் பெற முக்கியமான ஒருவராக அவர் திகழ்ந்துள்ளார்.

கற்பித்த இடங்களிலும் வாழ்ந்த இடங்களிலும் பலரது பாராட்டையும் வாழ்த்தையும் பெற்ற அவருக்குக் கிடைத்த கௌரவங்கள் பல. 'தினகரன் கௌரவவிருது', 'நவரசத் திலகம்', 'கூத்துக்கலைவேந்தன்' 'கூத்துக்கலை திரவியம்', 'தென்மோடித்திலகம்' போன்ற பட்டங்கள் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். 2005ல் இவரது 'சுயசரிதையும் கூத்துக் கலையும்' என்ற நூல் ரொறன்ரோவில் வெளியிடப்பட்டது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக', 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பதற்கமைய வாழ்ந்த திரவியம் மாஸ்டர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட திரு.எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள் 2013 ஜீன் 6ம்திகதி இறைவனடி இணைந்தார்.

சித்திரா பீலிக்ஸ் (அன்பு மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அன்ரோய்ட்' மென்பொருள் உருவாக்கத்தில் இரண்டு சிறுவர் இணைந்த சாதனை

உலகளாவிய ரீதியில் நவீன கைத் தொலைபேசி, சிலேடை [Smart Phone and Tablets] போன்றவற்றில் இயங்கும் மென்பொருள் விளையாட்டுகளின் சந்தை இந்த ஆண்டில் 12 பில்லியன் டாலர்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நவீன உற்பத்தி முறைகளினால் மூளைசாலிக் கருவிகளின் விலையில் வீழ்ச்சி, அதே நேரம் அவற்றின் இயக்க வேகம் அதிகரிக்க, இவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. இளம் சந்ததியின் கைகளில் இணைபிரியா நண்பனாக இவை போய்ச் சேர்ந்துள்ளன.

வர்த்தக மென்பொருட்கள் போலல்லாது விளையாட்டு மென்பொருட்கள் தொழில்நுட்ப ரீதியில் சிக்கல் நிறைந்தவை. அவற்றின் எல்லைகள் வரையறைக்கு உட்பட்டவை அல்ல. விளையாட்டு மென்பொருட்களில் பயன்படும் பல தொழில்நுட்பங்களும் தந்திரோபாயங்களும் இன்று அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் தலிபான்களை மடக்க பயன்படுத்துகின்றது. இத்தகைய மென்பொருட்களை வடிவமைப்பவர்களின் திறமைக்கு இது ஒரு சான்று.

இந்தவகையைச் சேர்ந்த ஜேர்மனியில் வளர்ந்துவரும் 16 வயதுடைய சிறுவர்களான ஈழத்துச் சிறுவன் பார்த்திபன் ரமேஷ் வவுனியனும் இந்தியா ஜெய்ப்பூரைச் சேர்ந்த அபே பன்சால் ஆகிய இருவரும் இணைந்து கூகிள் அன்ட்ரொய்ட்டில் இயங்கும் விளையாட்டு மென்பொருளை உருவாக்கி சாதனையை சாதித்துள்ளார்கள். இவர்களுடைய சாதனை நம் இளம் சந்ததியை அடைந்து அவர்களுக்கு ஓர் ஆர்வத்தையும் அவர்களின் அறிவியல் வாசலையும் திறந்து வைக்க வேண்டும்.

இன்று சிறந்து விளங்கும் மென்பொருள் தொழில்நுட்பவியலாளர்கள் ஏதோ ஒரு கட்டத்தில் விளையாட்டு மென்பொருட்களை உருவாக்கியவர்களாகவே இருப்பார்கள். விளையாட்டு மென்பொருளை உருவாக்கும்போது அவர்களுக்கு ஆர்வத்தோடு தொழில்நுட்ப அறிவும், மூளையோடு சேர்ந்த நுண் அறிவும் கூடவே வளர்கின்றது.●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பிக்கப்பட்ட படங்களின் மொத்த எண்ணிக்கை: 1655
## 'விருதுக்குப் போட்டியிட தெரிவான 14 படங்களில் ஒன்று

# கனடியத் தமிழரின் a Gun & a Ring




தொண்ணூறுகளின் தொடக்கத்திலிருந்து கனடாவில் தமிழ்த் திரைப்பட முயற்சிகள் இடம்பெற்று வருகிறது. சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட திரைப்படங்கள் இங்கு தயாராகியுள்ளன. சந்தைப்படுத்தலைப் பொறுத்தளவில் இது வெற்றியளிக்கவில்லையாயினும், அதன் மீதான ஆர்வம் குறைந்துவிடவில்லை என்று கூறலாம்.

2009ல் வன்கூவர் சர்வதேச திரைப்பட விழாவில் '1999' என்னும் திரைப்படம் தெரிவாகி, எம்மவரின் திரைப்படங்களாலும் சாதனை புரிய முடியுமென்பது காட்டப்பட்டது. இப்போது லெனின் எம். சிவத்தின் இயக்கத்தில், Eyecatch Media Inc. தயாரித்த A Gun and A Ring திரைப்படம் உலகின் மிகமுக்கியமான திரைப்பட விழாவிற்குத் தெரிவாகியது இத்துறையின் குறுகியகால வளர்சிக்கு ஓர் உதாரணம்.

கடந்த மாதம் நடைபெற்ற ஷாங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் போட்டிப் பிரிவில் இது தெரிவாகி உலகளாவிய ரீதியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. உலகின் மிகமுக்கியமான போட்டித் திரைப்பட விழாக்கள் பதினான்கில் ஷாங்காயும் ஒன்று. இப்போட்டிக்கு மொத்தம் 1955 படாங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தங்கக் குவளை விருதுக்கு இவற்றுள் பதினான்கு தெரிவாகின. இதில், A Gun and A Ring படமும் ஒன்று.

ஜுன் 15ல் ஆரம்பமான விழாவில், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடாவிலிருந்து போன இப்படத்தின் கலைஞர்கள் ஒன்பது பேர் உட்பட உலகத் திரைப்பிரபலங்கள் சுமார் 400 பேருக்கும் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜுன் 17ஆம் திகதி ஷாங்காய் நகரிலுள்ள கனடிய துணைத்தூதுவர் Andrea Clark - Grignon அம்மையாரினால் கனடியப் படங்களினதும் மற்றைய ஏழு படங்களினதும் கலைஞர்களுக்கு சிறப்பான வரவேற்புடன் கூடிய மதிப்பளிக்கப்பட்டது.

ஜுன் 19 அன்று, A Gun and A Ring அதிகாரபூர்வ திரையிடல் இடம்பெற்றது. இங்கும் திரைப்படக் கலைஞர்களுக்கு மற்றொரு செங்கம்பள வரவேற்பு. திரண்டிருந்த ஆர்வலர்களோடு A Gun & A Ring குழுவினரும் தங்கள் திரைப்படத்தை முதன்முறையாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இதனையடுத்து சீன ஊடகங்களுடன் ஒரு சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. "இத்திரைப்படம் கனடிய திரைத்துறையின் தரத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது" என்று கனடிய துணைத்தூதர் இங்கு எடுத்துக்கூறி அனைவரையும் பெருமைகொள்ள வைத்தார். இப்படத்தின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்ட 'Best of Canada' நிகழ்வில், இயக்குனர் லெனின் எம். சிவமும், தயாரிப்பாளர் விஷ்ணு முரளியும் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஜுன் 22 சனிக்கிழமை, அரங்கு நிறைந்த காட்சியாக மற்றுமொரு திரையரங்கில் இப்படம் காண்பிக்கப்பட்டது. மக்களோடு மக்களாக அமர்ந்திருந்த கலைஞர்களை அடையாளம் கண்டுகொண்ட ஆர்வலர்கள் பாராட்டு மழையால் அவர்களைத் திக்குமுக்காட வைத்தனர்.

ஜுன் 23 முக்கிய நாள். The Major என்ற ரஷ்ய திரைப்படத்துக்கு மூன்று விருதுகளும், Reliance என்ற திரைப்படத்துக்கு மூன்று விருதுகளும், Unbeatable என்ற திரைப்படத்துக்கு இரண்டு விருதுகளும் வழங்கப்பட்டன.


A Gun and A Ring திரைப்படத்துக்கு விருதுகள் எதுவும் கிடைக்கவில்லையாயினும், உலகின் 1655 படங்களோடு போட்டியிட்டு விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 14ல் ஒன்றாகத் தெரிவானது சாதாரணமானதன்று. வெள்ளித் திரைவானில் இது ஓர் வெற்றிச் சாதனை. கனடியத் தமிழரின் திரைப்பட வலாற்றில் இது ஒரு சிறப்பிடப் புள்ளி. எதிர்காலப் பரிசுகளுக்கும் விருதுகளுக்கும் முக்கிய கால்கோள்!

- கலைத்திரைஞன்

*(ஷாங்காய் திரைப்பட விழாவில் A Gun & A Ring கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்ட வைபவத்தில் எடுக்கப்பட்ட ஓர் ஒளிப்படம் இங்கு பிரசுரமாகியுள்ளது.)* ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classess




## Successful Real Estate Office With Over 300 Salespeoples

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- 90:10 Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2010. (does not include independent or other franchisors). ©2010 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org